# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 1 வள்ளுவர் ஆண்டு 2029 வைகாசி 12 (26-05-1998) செவ்வாய்க்கிழமை UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 153


# மாங்குளத்தைப் பிடிக்க படைகள் புதிய திட்டம்!

## எந்த விலை கொடுத்தும் தடுக்க புலிகளும் தயாராகின்றனர்

கொழும்பு, மே 26

எதிர்வரும் ஜூலை மாதம் கொழும்பில் நடைபெற உள்ள 'சார்க்' மாநாட்டுக்கு முன்னர் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள மாங்குளம் நகரைக் கைப்பற்றும் முனைப்புடன் புதிய திட்டம் ஒன்றை அரச தரப்பு தயாரித்து வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் மாங்குளம் நகரை அரசுப் படைகள் கைப்பற்றுவதை எந்த விலை கொடுத்தும் தடுத்து நிறுத்துவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் உறுதியுடன் தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

படையினரின் புதிய தாக்குதல் உத்திகுறித்து ஆராய்ந்து முடிவெடுப்பதற்காக கடந்த வார இறுதியில் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை படைத் தளபதிகள் சகிதம் வன்னிக்குச் சென்றிருந்தார்.

படைத்தரப்பு உயர்பீடம் மாங்குளத்தைக் கைப்பற்றுவதற்கான திட்டத்தை தயா

(10ஆம் பக்கம் பார்க்க)

## செங்கலடி முகாம் தாக்குதலில் புலிகள் தரப்பில் 14 பேர் களப் பலி!

வவுனியா, மே 26

மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடி இராணுவ முகாம் மீதும், அதன் அருகில்அமைந்திருந்த 'புளொட்' அமைப்பினரின் முகாம் மீதும்நேற்று முன்தினம் அதிகாலை நடத்திய தாக்குதலில் தமதுதரப்பில் 14 பேர் களப்பலியானதாக 'புலிகளின் குரல்' வானொலி நேற்றிரவு அறிவித்தது.

அவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

★ கப்டன் கெனடிதரன் (அருளானந்தம் குகேந்திரன் —மட்டக்களப்பு),

★ அமுதரசன் (முத்துவேல் விசாநந்தன்—மட்டக்களப்பு.)

★ லெப். தீபன் (கனகசபை மோகனதாஸ் — மட்டக்களப்பு.)

★ 2 ஆம் லெப். ராகுலன் அல்லது பாணபத்திரன்(வடிவேலு உதயகுமார்—மட்டக்களப்பு.)

★ 2 ஆம் லெப். அருவியன் (தம்பிராசா கணேசன் —மட்டக்களப்பு.)

★ 2ஆம்லெப். விஜயபாமன் (மயில்வாகனம் தேவநாதன் —மட்டக்களப்பு.)

★ கப்டன் செம்மல் (சுந்தரலிங்கம்ரவி—அம்பாறை.)

(9ஆம் பக்கம் பார்க்க)

## ரயில் நிலையப் பகுதியில் வெடிகுண்டுப் புரளி!

### சுவரொட்டியால் பீதி!!

விமான மற்றும் கப்பல் பயணிகள் ஒன்றுகூடும் யாழ். ரயில் நிலையப் பகுதியில் குண்டு வைக்கப்பட்டிருப்பதாக ஒட்டப்பட்டிருந்த எச்சரிக்கைச் சுவரொட்டியால் நேற்று அப்பகுதியில் சிறிது நேரம் பதற்றம் ஏற்பட்டது.

குண்டு வைக்கப்பட்டுள்ளதாக எழுதப்பட்ட சுவரொட்டி ஒன்று அப் பகுதியில் ஒட்டப்பட்டிருந்ததைத் தொடர்ந்து பயண ஏற்பாடுகளுடன் வந்த பயணிகள் நேற்றுக் காலை ரயில் நிலையப் பகுதிக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. ஏற்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு நாளில் 4ஆயிரம் பேர் படையில் இணைந்தனர்?

இராணுவத்தை விட்டு விலகியோர் மீண்டும் சேவையில் சேர்ந்து கொள்வதற்கு இறுதியாகநேற்றுமுன்தினம்வழங்கப்பட்ட பொது மன்னிப்பின்போது 4 ஆயிரத்து 441 பேர் மீண்டும் இராணுவத்தில் இணைந்துகொண்டுள்ளதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் காலை 8மணிமுதல் நள்ளிரவு 12 மணி வரை இந்த இறுதி அவ

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விமான, கடற்படையினர் 195பேரும் இணைவு!

கொழும்பு, மே 26

படையில் இருந்து விலகியோர் மீண்டும் சேவைக்குத் திரும்புவதற்காக நேற்று முன்தினம் விதிக்கப்பட்ட இறுதி நாள் பொதுமன்னிப்பு அவகாசத்தின் போது மீண்டும் படையில் இணைந்தோரில் 35 விமானப் படையினரும், 160 கடற்படையினரும் அடங்குவர்.

விமானப் படையைச் சேர்ந்த 125 பேரும், கடற்

( 2 ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸ் அதிகாரி பிணையில்

கொழும்பு, மே 26

கடந்த பெப்ரவரி மாதம் மூதூர் பாரதிபுரம் பகுதியில் எட்டு அப்பாவி ஆண்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கந்தளாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் ரணராஜ பண்டார நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டார்.

## ஆஸி. தூதரக அதிகாரி வருகிறார்

யாழ்ப்பாணம், மே 26

ஆஸ்திரேலியத் தூதரக உயர் அதிகாரி ஒருவர் நாளை யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

மூன்று நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் அவர் நாளை யாழ். செயலக அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடுவதுடன் யாழ். பொது நூலகத்திற்கும் நேரில் விஜயம் செய்வார்.

## சட்டத்தரணி சிவபாலன் யாழ். மேயராகிறார்

யாழ். மாநகரத்தின் புதிய மேயராக தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்டத்துறைச் செயலாளர் சட்டத்தரணி சிவபாலன் நியமிக்கப்படுகின்றார்.

இது தொடர்பான பத்திரத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆர். சம்பந்தன் இன்று அல்லது நாளை ஒப்பமிடுவார் என கூட்டணிப் பேச்சாளர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

''சட்டத்தரணி சிவபாலனை யாழ் மேயராக நியமிப்பது தொடர்பான பத்திரங்கள், கட்சியின் செயலாளர் நாயகம் ஆர். சம்பந்தனிடம் அனுப்பப்பட்டுள்ளன. அவர் ஒப்பமிட்ட பின்னர், யாழ்ப்பாண மாநகரத் தேர்தலுக்குப் பொறுப்பான தெரிவத்தாட்சி அலுவலருக்கு (யாழ்ப்பாண

[2 ஆம் பக்கம் பார்க்க]

## இராணுவ பாதுகாப்பை புதிய மேயர் ஏற்பார்?

கொழும்பு, மே 26

யாழ்ப்பாண நகரின் புதிய மேயராகப் பதவியேற்கும் சட்டத்தரணி சிவபாலன், யாழ்ப்பாணத்தில் படைத்தரப்பினர் தமக்கு வழங்கப்படும் பாதுகாப்பை ஏற்றுக்கொள்வார் என கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னாள் மேயர் திருமதி சரோஜினிதேவி யோகேஸ்வரன் தமக்கு படைத்தரப்பு வழங்க முன்வந்த பாதுகாப்பை ஏற்க மறுத்து நிராகரித்ததும்—பாதுகாப்பின்றி யாழ்ப்பாணத்தில் தமதுவீட்டில்வசித்த அவர் இனந் தெரியாத இருவரினால் சுட்டுக் கொல்லப்பட்டதும் – தெரிந்தவையே.

'இது விடயத்தில் நாம் சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்ளப் போவதில்லை. இரண்டு பக்க நிலைமைகளையும் சீர் தூக்கிப் பார்த்த சரியான முடிவெடுத்து விவேகத்துடன் செயற்படுவோம்'' — என்று மூத்த கூட்டப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (உ)

## நல்லூர்ப் பகுதியில் படையினர் தேடுதல்

நல்லூர் கோயில் வீதி, மருதடி வீதி, நாவலர் வீதி, இராசாவின் தோட்ட வீதி, றக்கா வீதி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பிரதேசத்தில் நேற்றுக் காலை 6 மணி முதல் படையினர் சுற்றிவளைப்புத் தேடுதலை நடத்தினர்.

வீடுகளில் இருந்த பொது மக்கள் நல்லூர் கைலாச பிள்ளையார் கோயில் பகுதிக்கு அழைத்து வரப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

மேற்படி வீதிகள் ஊடாக பயணம் செய்தவர்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். சில இடங்களில் பாடசாலை மாணவர்களின் புத்தகப் பைகளையும் படையினர் சோதனை செய்தனர்

இச்சோதனை நடவடிக்கையின் போது எவரும் கைது செய்யப்பட்டதாகத் தெரியவரவில்லை.

இதேவேளை நாவாந்துறை பகுதியும் நேற்றுக் காலை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டது.

## கிண்ணியடி வாவியில் யுவதியின் சடலம் மீட்பு!

வாழைச்சேனை கிண்ணியடி வாவியில் இருந்து 16 வயது மதிக்கத்தக்க யுவதி ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

ஜீன்ஸும், ரீ-சேட்டும் அணிந்த நிலையில் காணப்பட்ட அந்தச் சடலத்தை வாவியில் கண்ட மீனவர்கள் அதுபற்றி பொலீஸாருக்குத் தகவல் கொடுத்ததை அடுத்து பொலீஸார் சடலத்தை மீட்டனர்.

மேற்படி யுவதி கழுத்து நெரிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருப்பதாக மரண விசாரணை மூலம் தெரியவந்தது.

சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. சடலத்தை அரச செலவில் அடக்கம் செய்யுமாறு மரண விசாரணை அதிகாரி டாக்டர் சீ. எஸ். காராளசிங்கம் உத்தரவிட்டார். (ஐ-21)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது பாசமிகு தங்கை

## திருமதி பத்மநாதன் ரமணிக்கு

எங்கள் அன்புக் காணிக்கையை
கண்ணீர்களாய்ச் சமர்ப்பிக்கின்றோம்.

சகோதர, சகோதரிகள்,
மைத்துனர்கள்.

பொலிகண்டி. (56287)

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பத்மநாதன் ரமணி

பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வாழ்விடமாகவும் கொண்ட திருமதி பத்மநாதன் ரமணி (சட்ட ஆலோசகர், மக்கள் வங்கி பிராந்திய அலுவலகம், மட்டக்களப்பு) மட்டக்களப்பில் 25 – 5 – 98 இல் காலமானார்.

அன்னார் பத்மநாதனின் (பொறியியலாளர்) அன்பு மனைவியும், செல்வி பத்மநாதனின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற முருகேசு தம்பிமுத்து (உதவி அரசாங்க அதிபர்), சீதாலட்சுமி (இளைப்பாறிய ஆசிரியை) தம்பதிகளின் புதல்வியும், நந்தகுமார் (கிராம சேவையாளர், பருத்தித்துறை), செந்தில்குமார் (சுகாதாரத் திணைக்களம், ஊர்காவற்றுறை), ராஜினி (வைத்திய கலாநிதி பிரதேச சபை, நல்லூர்), வசந்தி (ஆசிரியை, டிக்கோயா), சாந்தகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சத்தியசீலன் (வைத்திய கலாநிதி), கருணாகரன் (வைத்திய கலாநிதி), தனலெட்சுமி (லிகிதர், பிரதேச சபை, பருத்தித்துறை), சிறீமதி ஆகியோரின் மைத்துனியும், பிருந்தா, சுதர்சன், காயத்திரி, சஞ்ஜீவன், சிந்துஜா, சோபனா, நிஷாந்தினி, பிரியநதினி, தஷானி, கலீபன் ஆகியோரின் மாமியும், பிரியங்கரி, பிரதாயினி, மயூரேஷன், மைத்ரேயி, பிந்துரன், விதுாஷன், வினோதினி ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் மட்டக்களப்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி தம்பிமுத்து சீதாலட்சுமி
(தாயார்)
த. நந்தகுமார்
(கிராம சேவையாளர்)

பொலிகண்டி,
பருத்தித்துறை. (56286)

---

## செல்லையா சீவரத்தினம்

திருநெல்வேலி தெற்கு, 182, சேர் பொன். இராமநாதன் வீதியைச் சேர்ந்த செல்லையா சீவரத்தினம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா தங்கம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், மனோரஞ்சிதமலரின் அன்புக் கணவரும், செல்வநாயகத்தின் (செல்வா, 1997 வர்த்தகப்பிரிவு, கொக்குவில் இந்துக் கல்லூரி) பாசமிகு தந்தையும், கொக்குவில் மேற்கைச் சேர்ந்த செ. தம்பித்துரையின் (ஓய்வுபெற்ற நீதிமன்ற முதலியார்) அன்புச் சகோதரரும், த. பராசக்தியின் மைத்துனரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று செவ்வாய்க்கிழமை (26–05-1998) காலை 10.00 மணி அளவில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
சீ. செல்வநாயகம் (செல்வா)
(மகன்)

(56278)

---

## பொன்னையா பத்மநாதன்

(ஓய்வுபெற்ற மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்)

நவாலியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு அரசடியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பத்மநாதன் 18 – 05 - 98 இல் கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 26 – 05 – 98 மாலை 3.00 மணிக்கு பொரளையில் நடைபெற்று பூதவுடல் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. பாலகுமாரன்
(மருமகன்)

தாவடி தெற்கு,
கொக்குவில். (55418)

---

### விமான..

(முதலாம் பக்கத் தொடர்)
படையைச் சேர்ந்த 40) பேரும் ஏற்கனவே சேவையில் சேர்ந்து கொண்டுள்ளனர்.

விமானப் படையைச் சேர்ந்த 150 பேர் இன்னும் தலை மறைவாக உள்ளதாக விமானப்படைத் தளபதிகூறியுள்ளார். (ஐ–21)

### ரயில்...

[முதலாம் பக்கத் தொடர்]
சனவே அங்கு கூடியிருந்த பயணிகளும் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர்.

அவசர மாற்று ஏற்பாடாக விமானப் பயணிகள் அனைவரும் நேற்று யாழ். ஆஸ்பத்திரி வீதிச் சந்திக்கு சமீபமாக முன்னர் சிங்கள மகாவித்தியாலயம் அமைந்திருந்த மைதானப் பகுதிக்கு வரவழைக்கப்பட்டு அங்கு வைத்தே சோதனை செய்யப்பட்ட பின் பஸ்களில் ஏற்றி அனுப்பப்பட்டனர்.

இந்த அநாமதேய குண்டுப் பயமுறுத்தல் காரணமாக பயணிகளிடையே சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. (ஐ–9–15–135–103)

### சட்டத்தரணி....

[முதலாம் பக்கத் தொடர்]
உதவித் தேர்தல் ஆணையாளருக்கு) அவை அனுப்பி வைக்கப்படும். அவர் அவற்றைப் பரிசீலித்த பின்னர் வர்த்தமானி அறிவித்தலுக்காக தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைப்பார். வர்த்தமானி அறிவுறுத்தல் வெளியானதும் சட்டத்தரணி சிவபாலன், புதிய யாழ். மேயராகப் பதவியேற்பார்.'' —இவ்வாறு ஆனந்தசங்கரி மேலும் தெரிவித்தார்.

சுட்டுக் கொல்லப்பட்ட யாழ். மேயர் திருமதி சரோஜினிதேவி யோகேஸ்வரனின் இடத்துக்கு சிவபாலன் நியமிக்கப்படுகின்றார். கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது யாழ்ப்பாணத்தில்தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் நடவடிக்கைகளை முன்னின்று நடத்தியவர் சிவபாலன் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

---

நாகம்ஸ்
சினிமா
சுன்னாகம்.
26 - 05 - 98 செவ்வாய்
அகல வெண் திரையில்
ரஜனி - சோபனா
நடித்த
சிவா
( CD வெளியீடு )
காட்சி:- 10-30, 2–30
(56288)

ராஜா டாக்கீஸ்
யாழ்ப்பாணம்.
கார்த்திக், செளந்தர்யா
நடித்த
பொன்னுமணி
தினசரி
10-30 — 2–00, 5-00
(புதிய நேரம்)
திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் படம் காண்பிக்கப்படும் ஒரே படமாளிகை.
(சி/3830)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
இன்று
சிவாஜி, ஜெயலலிதா
நடித்த
அவன்தான்மனிதன்
நேரம்:- 10-30. 2-30
பழைய நேரம்
சனி, ஞாயிறு
TITANIC
Part I & II
தொலை பேசி இல.
070 - 212223
(56294)

---

# மரண அறிவித்தல்கள்

திருமதி

## பானு கந்தவனச்செல்வன்

திருமதி பானு கந்தவனச்செல்வன் 24–05–1998 அன்று காலமானார்.

அன்னார் கந்தவனச்செல்வனின் (யா/ றோ. க. வித்தியாலய ஆசிரியர்) அன்பு மனைவியும், Dr. பேரானந்தம் (நவாலி வைத்தியசாலை), காலஞ்சென்ற திருமதி பேரானந்தம் ஆகியோரின் பாசமிகு மகளும், திரு. திருமதி நடராஜா (தையிட்டி) ஆகியோரின் பாசமிகு மருமகளும், திருமதி கீதா, லதா (ஆசிரியர் கலாசாலை, பலாலி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி செந்தமிழ்ச்செல்வி (கனடா), கலைச்செல்வி, இசைச்செல்வன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை (26–05–98) பிற்பகல் 3 மணியளவில் தாவடியில் நடைபெறும்.

தகவல்:
திரு. கந்தவனச்செல்வன்
(கணவன்)

கொக்குவில். (56269)

---

## கனகசபை பாலசுப்பிரமணியம்

(இளைப்பாறிய உதவி அரச அதிபர்)

காரைநகர், தபாற்கந்தோரடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அரசடி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான கனகசபை பாலசுப்பிரமணியம் அவர்கள் ஞாயிறன்று 24-5-98 இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை (இளைப்பாறிய ஆசிரியர்), திருமதி இராசம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து (இளைப்பாறிய ஆசிரியர்), திருமதி நாகம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், தவநாயகியின் அன்புக் கணவரும், நாகேஸ்வரன் (மருத்துவ பீடம், யாழ். பல்கலைக் கழகம்), நாகேஸ்வரி (C. I. M.A., கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான கணேசன், சிதம்பரநாதன், ஆனந்தராஜா, கருணாகரன், கோபாலன் மற்றும் தியாகராஜா (லண்டன்), நாகரட்ணம், இராஜேஸ்வரன் (தொழில் நுட்ப உதவியாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், கிளிநொச்சி), நவமணி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரரும்; காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (26-5-98) செவ்வாய்க்கிழமை கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பா. நாகேஸ்வரன்
(மகன்)

91/1, அரசடி வீதி,
யாழ்ப்பாணம். (56298)

---

திருமதி

## பென்ஞமின் இங்கிருதமலர்

திருமதி பென்ஞமின் இங்கிருதமலர் அவர்கள் 24 — 05 — 1998 அனறு கர்த்தரின் மகிமைக்குள் பிரவேசித்து விட்டார்.

அன்னார் பென்ஞமினின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு. திருமதி வேதநாயகம் போல் அவர்களின் அன்பு மகளும், டிக்ஷன், ஜெயபாலன், சார்ள்ஸ் குணசீலன், காலஞ்சென்ற ஆர்தர் செல்வநாயகம், ஜேம்ஸ் ஆரியரட்ன, பீற்றர் தனராஜசிங்கா ஆகியோரின் பாசமுள்ள சகோதரியும் கிறேஸ், றொஷாணி, வான்மதி, ஜெபக்குமாரி ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 26- 05- 1998 செவ்வாய்க்கிழமை காலை 10. 00 மணிக்கு இலங்கை பெந்தெகொஸ்தே சபையினரால் மாகியம்பதி சண்டிலிப்பாயில் நடத்தப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜேம்ஸ் ஆரியரட்ன
(சகோதரன்)

சண்டிலிப்பாய். (56285)

---

திருமதி

## இராசம்மா சபாரத்தினம்

விளானை, காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இராசம்மா சபாரத்தினம் 25-5-98 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற ப. சபாரத்தினம் (Attorney at-Low) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஆறுமுகம் தம்பதிகளின் மூத்த மகளும், திருமதி செல்லம்மா ஆறுமுகத்தின் அன்புச் சகோதரியும், மங்கையர்க்கரசி, புனிதவதி, சிவபாதவிருதயர், சுந்தரமூர்த்தி, அருணந்தி, Dr. சிவனேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், நடராசா சிவக்கொழுந்து. மகேஸ்வரி, றஞ்சனி, Dr. சாலினி, ஈஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் செவ்வாய்க்கிழமை (26–05-98) இன்று காலை 10 மணிக்கு 89/1. பிறவுண் வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல்மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. சிவபாதவிருதயர்

(58283)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விமான கடத்தற்காரர் மூவரும் கைதாகினர்

## 8 மணி நேர திகில் நாடகம் முடிவு

ஹைதராபாத், மே 26

**பாகிஸ்தான் விமானத்தைக் கடத்திய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். பாகிஸ்தான் இராணுவ கொமோண்டோக்கள் அதிரடித் தாக்குதல் நடத்தி கடத்தற்காரர்களைப்பிடித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.**

இந்த விமானம் 29 பேருடன் பாகிஸ்தானின் ஹைதராபாத் விமான நிலையத்தில் வைத்து கடத்தப்பட்டு எட்டு மணி நேரம் கடத்தற்காரர்களின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருந்தது.

இந்த 29 பேரில் 24 பேர் பயணிகள், ஐவர் விமான சிப்பந்திகள்.

கடத்தற்காரர்கள் மீது இராணுவ கொமோண்டோக்கள் நடவடிக்கை எடுத்த சமயம் இவர்களில் எவரும் காயம் அடையவில்லை. எனினும் கொமோண்டோ அணியைச் சேர்ந்த மேஜர் ஒருவர் சிறிது காயம் அடைந்தார்.

விமானத்தைக் கடத்தியவர்கள் மாணவர்கள் என்றும் —

பாகிஸ்தானின் அணுவெடிப்பு பரிசோதனை முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து இவர்கள் விமானத்தைக் கடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் கடத்தற்காரர்களுடன் நீண்டநேரம்நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் பின்னர் 13 பயணிகளை விடுவிப்பதற்கு கடத்தற் காரர்கள் இணங்கினர்.

ஏனையோரை விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தையை நடத்துவதற்காக கடத்தற்காரர்கள் வந்த சமயம் கொமோண்டோக்கள் அவர்களை மடக்கிப் பிடித்தனர்.

கடத்தற்காரர்கள் பலுகிஸ்தான் மாணவர் சம்மேளனத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஒரு வார காலமாக பாகிஸ்தான் மாகாணங்களில் ஒன்றான பலுகிஸ்தானில் நடைபெற்றுவரும் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை இந்த சம்மேளனமே நடத்தி வருகிறது.

கடத்தற்காரர்கள் தம்மை இந்தியாவுக்கு கொண்டு செல்லும்படி கோரி இருந்தனர். (இ)

# சுஹார்ட்டோ போன்று ஷெரிபும் பதவியில் இருந்து விலக வேண்டும்

## பெனாஸிர் கோரிக்கை

ஜகர்த்தா, மே 26

"இந்தோனேசிய ஜனாதிபதி சுஹார்ட்டோ பதவி விலகியது போல பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப்பும் பதவி விலக வேண்டும்."

இவ்வாறு பாகிஸ்தான் எதிர்க்கட்சித் தலைவர் பெனாஸிர் பூட்டோ கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியா நடத்திய அணுக்குண்டுப் பரிசோதனையைத் தொடர்ந்து பதில் நடவடிக்கை எடுப்பதில் பாகிஸ்தான் அரசுடன் ஒத்துழைப்பதாகக் கூறிய பெனாஸிர் பூட்டோ தற்போது இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

அணுக்குண்டுப் பரிசோதனைகள் விடயத்தில் அரசாங்கம் தவறான வழிமுறைகளைப் பின்பற்றி மக்களின் ஆதரவை இழந்து விட்டதெனவும்—

பாகிஸ்தான் இந்தியாவின் அச்சுறுத்தலை எவ்வாறு கையாளப் போகின்றது என வெளிநாடுகளுக்கு உடன் எடுத்துக்கூறியிருக்க வேண்டிய ஷெரீப் மற்றைய நாடுகளின் அறிவுரையைக் கேட்டுக் கொண்டிருந்தமை தவறு என்றும் பெனாஸிர்பூட்டோ தெரிவித்துள்ளார். (இ-7)

## காஷ்மீரில் வெள்ளம்

புதுடில்லி, மே 26

ஜம்மு காஷ்மீரின் லியன் நகரில் நேற்று முன்தினம் ஏற்பட்ட கடுமையான வெள்ளப் பெருக்கினால் பலவீடுகள் அழிந்தன. பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

(இ-7)


உ

சிவமயம்

# உபநயன ப்ரம்மோபதேச அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான வெகுதானிய வருஷம் வைகாசி மாதம் 13ஆம் திகதி (27-05-1998) புதன்கிழமை துதியைத் திதியும், மிருகசீர்ஷ நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் காலை 07-58 மணிமுதல் 09-34 மணிவரையுமுள்ள மிதுன லக்ன சுபமுகூர்த்த வேளையில்



உடுவில் சிவஞானப் பிள்ளையார் கோயில்
பிரம்மஸ்ரீ வா. சர்வேஸ்வரசர்மா
கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய
பிரதமகுரு
சிவஸ்ரீ ந. சோமாஸ்கந்த குருக்கள்
ஆகியோரின் பேரனும்
எமது ஜேஷ்ட புத்திரனுமாகிய



செல்வன் சிரஞ்சீவி

**சஞ்ஜீவன்;**

அவர்களுக்கு

எல்லாம் வல்ல ஸ்ரீ வரதராஜ விநாயகப் பெருமான் திருவருளினால்

**சௌள யக்ஞோபவீத்தாரண ப்ரம்மோபதேசம் செய்ய**

பெரியோர்களினால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி சுபமுகூர்த்தம் கொழும்பு, கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய

**ஐங்கரன் மண்டபத்தில்**

நடைபெறவுள்ளதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து செல்வனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்:

105, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13, தொலைபேசி 33 67 89

பிரம்மஸ்ரீ ச. மகேஸ்வர சர்மா, ஸ்ரீமதி ம. தவமணி.

வரவேற்பாளர்கள்:

பிரம்மஸ்ரீ வா. சர்வேஸ்வரசர்மா தம்பதிகள்
சிவஸ்ரீ ந. சோமாஸ்கந்த குருக்கள் தம்பதிகள்
ஸ்ரீ செ. செல்வநாத சர்மா தம்பதிகள்

(சி-3828)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அணுசக்தி ரகசியங்கள்

# ஜேர்மனியிடமிருந்து பெற பாகிஸ்தான் முயன்றது

புதுடில்லி, மே 26

அணுகுண்டு தயாரிப்பதற்கான உயர் தொழில் நுட்பத்தை ஜேர்மன் நாட்டு அணுசக்தி நிறுவனத்திடம் இருந்து இரகசியமாகப் பெறுவதற்கு பாகிஸ்தான் மேற்கொண்ட முயற்சிகள் தற்போது அம்பலமாகி உள்ளன.

இந்திய அணுவெடிப்புப் பரிசோதனைகளுக்கு முன்பே பாகிஸ்தான் இந்த முயற்சியில் ஈடுபட்டு வந்ததாக செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(இ-7)

# விடுதலை செய்யுமாறு கைதிகள் கோரிக்கை

லண்டன், மே 26

இந்தோனேசியாவில் சிறைவைக்கப்பட்டுள்ள 200 அரசியல் கைதிகள், புதிய அரசாங்கம் தம்மை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டின் அரசியல் எதிர்ப்பாளர்களில் பெரும்பாலானோர் சிறை வைக்கப்பட்டுள்ள சிப்பினான் சிறைச்சாலைக் கைதிகளே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

உலக அரங்கில்

நேற்று முன்தினம் செய்தியாளர்கள் சிறைச்சாலைக்கு விஜயம் செய்திருந்தபோதே இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

சிப்பினான் சிறைச்சாலையில் சிறைவைக்கப்பட்டுள்ள அரசியல் எதிர்ப்பாளர்களில் ஒருவரான கிழக்கு தீமோர் எதிர்ப்பு இயக்கத்தின் தலைவர் குவானாகுசாமோ, புதிய அதிபர் பி. ஜே. ஹபீபி முன்னாள் அதிபர் சுஹார்ட்டோவுக்கு மிக நெருக்கமானவராதலால் அவரை தாம் நம்பவில்லை என்று தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகளில் 15 பேரை மட்டுமே விடுதலை செய்யப் போவதாக இந்தோனேசிய நீதித்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

(இ-7)

## வெப்பத்தினால் 2 ஆயிரம் கோழிகள் பலி

புதுடில்லி, மே 26

ஆந்திரா மாநிலத்தின் கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் கடந்த இருவாரங்களாக நிலவிவரும் கடும் வெப்பத்தினால் 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட கோழிகள் இறந்து விட்டன.

கடந்த இருவாரமாக கோதாவரி மாவட்டத்தில் 42 பாகை செல்சியஸ் வெப்ப நிலை நிலவியதாகவும்—

கடுமையான வெப்பத்தை தாங்கிக்கொள்ள முடியாத காரணத்தினாலேயே கோழிகள் இறப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-7)

# இந்தியாவில் வெப்பம்; 50 பேர் மரணம்

புதுடில்லி, மே 26

இந்திய மாநிலங்களில் நிலவும் கடும் வெப்பம்காரணமாக இதுவரை 50-க்கும் மேற்பட்டோர் இழந்துள்ளனர்.

இந்தியாவிலேயே அதிகபட்ச உயர் வெப்பம் வட மாநிலமான உத்தரப்பிரதேசத்தில் உள்ள கோண்டா மாவட்டத்தில் நிலவுகின்றது.

உத்தரப் பிரதேசத்தில் கடும் வெப்பம் காரணமாக பாதிக்கப்பட்டவர் பலர் அங்குள்ள ரயில் நிலையங்களிலும், பாலங்களிலும், நடைபாதைகளிலும் படுத்துறங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்து நிலவிவரும் கடும் வெப்பத்தினால் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படலாமென ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

(இ-7)

# நீண்ட தாடி வளர்க்காத 50 பேருக்கு கசையடி!

லண்டன், மே 26

நீண்ட தாடி வளர்த்துக் கொள்ள வேண்டுமென்ற விதிமுறையை மீறியதுக்காக 500 ஆண்களுக்கு தலிபான் பொலீஸாரால் கசையடி வழங்கப்பட்டுள்ளது.

பெண் பயணிகளையும் ஆண் பயணிகளையும் ஒன்றாக ஏற்றிச் சென்ற குற்றத்துக்காக கார் சாரதிகள் 10 பேருக்கும் இதே வித தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை முகத்தை முழுமையாக மறைக்கத் தவறிய குற்றத்துக்காக 100 இற்கும் அதிகமான பெண்கள் பொது இடம் ஒன்றில் வைத்து கண்டிக்கப்பட்டனர்.

(இ-7)


இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ். கிளைத் தலைமையகம்
யாழ். கிளையின்

## ஆண்டுப் பொதுக்கூட்டம் - 1998
## ஒத்திவைத்தல்

31-05-98இல் நடைபெறவிருந்த மேற்படி ஆண்டுப் பொதுக்கூட்டம். தவிர்க்க முடியாத காரணத்தினால் 02-08-98 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. பிரதிநிதிகள், பிரதிப் பிரதிநிதிகள், உறுப்பினர்கள் யாவரும் இதனைக் கருத்தில் கொள்ளவும்.

நன்றி.

கௌரவ செயலாளர்,
இ. செ. சங்கம் யாழ். கிளை.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-3834)

# சனிக்கிழமைகளில் பாடசாலை நடத்துவதற்கு ஆசிரியர்கள் எதிர்ப்பு

## சுகவீன விடுமுறையில் நிற்க முடிவு

கொழும்பு, மே 24

ஜூன் 13 ஆம் திகதி சனிக்கிழமையை பாடசாலை நாளாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளதற்கு ஆசிரியர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் சுமார் 40 ஆயிரம் உறுப்பினர்கள் சுகவீன விடுமுறையில் செல்வதெனத் தீர்மானித்துள்ளனர்.

'சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் அரசாங்க விடுமுறை நாள்கள் ஆகும். மேலும் இது அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமையும் ஆகும். இந்நிலையில் சனிக்கிழமை பணியாற்ற வேண்டும் என ஆசிரியர்களைக் கட்டாயப்படுத்துவது நியாயமற்ற நடவடிக்கை'.

இப்படி இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொருளாளர் சந்திமால் விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு ஜனவரி 10, ஜூன் 13, ஒக்ரோபர் 3 ஆகிய நாள்களில் (சனிக்கிழமைகளில்) பாடசாலைகளை நடத்துவது என கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

கடந்த ஜனவரி 10 ஆம் திகதி சனிக்கிழமை பாடசாலைகள் நடத்தப்பட்டன.

எனினும் எதிர்காலத்தில் சனிக்கிழமைகளில் பாடசாலைகளை நடத்தினால் அன்று பணிக்கு சமுகமளிப்பதில்லை என தமது சங்கம் தீர்மானித்துள்ளது என கல்வி உயர் கல்வி அமைச்சர் ரிச்சாட் பத்திரானாவுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாக சந்திமால் விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

(இ10)

## கிளைமோர் வெற்று மூடி ஏற்படுத்திய பரபரப்பு

நெல்லியடி, மே 26

வீதியில் கிடந்த கிளைமோர் மூடி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

கடந்த சனிக்கிழமை காலை 7.30 மணியளவில் மந்திகை மரக்கறிச் சந்தைக்கு சமீபமாக வீதியில் இது காணப்பட்டது.

தகவல் அறிந்து அந்த இடத்திற்கு விரைந்து சென்ற மந்திகை இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர், அப் பகுதியால் செல்வோரை, வழிமறித்து தடுத்து வைத்த பின்னர், சோதனை மேற்கொண்ட சமயம், அது கிளைமோர் வெற்று மூடி என தெரிய வந்தது. (இ-109)

## காரைநகருக்கு மரக்கறி

சுழிபுரம், மே 26

பொன்னாலைப் பாலம் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து தினமும் பெருமளவு காய்கறிகள், வாழைப்பழம் போன்றவை மூடை மூடையாககாரைநகருக்குமூளாய்ப் பகுதியில் இருந்து கொண்டு செல்லப்படுகின்றன.

காரைநகரில் உள்ள வியாபாரிகள் முதல் நாள் பிற்பகல் வந்து அடுத்தநாள் காலை பொருள்களைக் கொண்டு செல்கின்றனர். இதனால் வியாபாரிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. காரைநகர் பல நோக்கு கூட்டுறவுச்சங்க லொறிகள் சங்கப் பொருள்களை இப் பாதையாலேயே யாழ்ப்பாணம் வந்து எடுத்துச் செல்கின்றன.

(தி-28-9)

## நவாலி, ஆனைக்கோட்டை பகுதிக்குமின்சாரம்இல்லை

நவாலி, ஆனைக்கோட்டைப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

அயற் கிராமங்களாகிய மானிப்பாய், உடுவில், சுதுமலைப் பகுதிகளுக்கு பல மாதங்களுக்கு முன்பே மின்சாரம் வழங்கப்பட்டு விட்டது.

ஆனால் இப்பகுதிகளுக்கு புதிய மின் கம்பங்கள் கூட இதுவரைபோடப்படவில்லை என்று மக்கள் தெரிவிக்கின்றனர். (இ-100)

## தொப்பிகள்

வட்டுக்கோட்டை மே 26

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி. மேற்குப் பிரிவு தயாரித்த பாடசாலை மாணவர்களுக்கான வெள்ளைத் தொப்பிகள் ஒவ்வொன்றும் நாற்பது ரூபாவாக விற்கப்பட்டு வருகிறது. (இ-9-12)

## கடமையில்

நெல்லியடி, மே 26

விடுமுறையில் சென்ற மந்திகை மருத்துவ மனையின் தென்னிலங்கை பெண்டாக்டர்கள் இருவரும் கடந்த 20 ஆம் திகதி முதல் மீண்டும் தமது சேவையை பொறுப்பேற்றுள்ளனர்.

(இ-109)


## 31-ம் நாள் நினைவஞ்சலி



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், நயினாதீவில் வசித்தவருமாகிய

அமரர்

**துரைச்சாமி ஜெயபாலன்**

(ஜேக்கப்)

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்தபாலகம் – அளவெட்டி)

எமது இதயத்து உறவாக 19 - 07 - 1939

அன்பின் அழிவற்ற நினைவாக 26 - 04 - 1998

இன்தமிழ் மொழியின் ஆற்றல்
இனித்திடும் அன்புப் பொய்கை
தனித்திட்ட உறவு - இன்று
பனித்திட்ட விழிகள் மூடும்

ஒரு கணத்து மௌனத்தில்
தரிசனம் ஆகும் ஐயா
பரிசனம் உறவும் ஏங்க நீர்
இறைவனை நாடிச் சென்றீர்,

ஐயா ................ உங்கள்
மதிமுகம் காண்பதெங்கே?
மதியுரை கேட்பதெப்போ?
வழிகாட்டும் ஒளி விளக்கே! நின்
வழிபதில் நாம் நடப்போம்.

தாய், மனைவி, மக்கள், மருமக்கள், மாமி, சகோதரர்கள், மைத்துனர்கள், பேரப்பிள்ளைகள், சகலர் மற்றும் உற்றார், உறவினர், நண்பர் கள்.

'பொற்கமலாதேவிவாசம்'
புதிய செங்குந்தாவீதி,
திருநெல்வேலி கிழக்கு. (56273)



## லக்ஷி தொலைத் தொடர்பகம்

அச்சுவேலி.

உள்நாட்டு – வெளிநாட்டு தொலைபேசி அழைப்பு

070 - 212233

24 மணிநேர சேவை

தங்குமிடம் இலவசம்

சன்னதி றோட், அச்சுவேலி, (வைரவர் கோயில் அருகில்) (56280)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 22 — 09 — 1922



உதிர்வு 26 — 04 — 1998

**திருமதி கிறேஸ் யுவக்கீன்**

அன்பின் உருவமாய்
அறிவின் திருமுகமாய்
பாசத்தின் உறைவிடமாய்
பார் தந்த அன்னையே
மண்ணில் நீர் உறங்க
கண்ணீரில் நாம் கரைகின்றோம்
எந் நாளும் உமை மறவா
அன்பு நெஞ்சங்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கின்றோம்.

இவரின் ஆத்மா சாந்தியடைய புனித யுவானியார் ஆலயத்தில் இன்று (1998-05-26) காலை திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், சகோதரர், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மச்சாள்மார்.

03, சோமசுந்தரம் அவன்யூ,
சுண்டுக்குளி, (56276)



உ

## விவாஹ சோபன அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான வெகுதானிய வருடம் வைகாசி மாதம் 13ஆம் நாள் புதன்கிழமை (27-05-98) காலை 7-58 மணிமுதல் 9-34 மணி வரையுள்ள மிதுன லக்கின சுபமுகூர்த்த வேளையில்

பிரம்மஸ்ரீ நடராச சர்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வன்
**பாலகிருஷ்ணசர்மா**
(கண்ணன்)
(பிரான்ஸ்)
அவர்களுக்கு



சிவஸ்ரீ சபாரத்தினக் குருக்கள் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வி
**நிரோசனா**
(நிரோ)
(புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலய ஆசிரியை) அவர்களை

கொக்குவில் கிழக்கு நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

பிரம்மஸ்ரீ நடராஜ சர்மா தம்பதிகள்
கோண்டாவில் கிழக்கு.

சிவஸ்ரீ சபாரத்தினக் குருக்கள் தம்பதிகள்
கொக்குவில் கிழக்கு.

இரு வீட்டாரதும் தனிப்பட்ட அழைப்பாக இதனை ஏற்கவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் குறைந்த உணவு குறித்து சீநோர் முகாம் அகதிகள் முறையீடு

யாழ்ப்பாணம், மே 26

குருநகர் சீநோர் முகாமில் தங்கவைக்கப்படுகின்ற அகதிகளுக்கு வழங்கப்படுகின்ற உணவு தரக்குறைவாக உள்ளதாக அங்குள்ள மக்கள் நிர்வாகத்திடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

வன்னிப் பகுதியில் இருந்து குடாக்கடல் ஊடாக யாழ்ப்பாணம் வரும் மக்கள் குருநகர் சீநோர் முகாமிலேயே தங்க வைக்கப்படுகின்றனர்.

இவ்வாறு தங்க வைக்கப்படுபவர்களின் விசாரணைகள் முடிவடைந்து அவர்கள் சொந்த இடங்களுக்குச் செல்ல சில சமயங்களில் ஒரு வாரம்கூட சென்று விடுகின்றது.

இவ்வாறு தங்கியிருப்போர் விசாரணைகள் முடியும்வரை வெளியில் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை, எனவே அவர்கள் வந்திருக்கின்ற செய்தி அவர்களின் உறவினர்களுக்குக்கூட சில சமயங்களில் தெரிவதில்லை.

இந்நிலையில் அவர்கள் முகாமில் வழங்கப்படுகின்ற உணவை மட்டுமே உண்ண வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

இவ்வாறு வழங்கப்படுகின்ற உணவே தரக்குறைவாக உள்ளதாக அவர்கள் நிர்வாகத்தினரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

காலையும், மாலையும் பாண் வழங்கப்படுகின்றது. அதில் சில சமயங்களில் பழைய பாணும் சேர்த்து வழங்கப்படுவதாகவும் —

மதியம் வழங்கப்படும்சோறு சில சமயங்களில் அவியாமல் உள்ளதாகவும் —

மீன் கறி எனக்கூறி மீன் இல்லாமல் குழம்பை மட்டும் சேர்த்து மதியச் சாப்பாடு வழங்கப்படுவதாகவும் — முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு நிர்வாகத்தினர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

(இ-9-51)

# வீதி திருத்தும் வேலை தாமதமடைய தார், றோலர் இன்மையே காரணம்

## திணைக்கள அதிகாரிகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் மே 26

யாழ். மாவட்டத்தின் வீதித் திருத்த வேலைகள் மந்தகதியில் நடைபெற்று வருவதற்கு போதிய தார் யாழ். எடுத்து வரப்படாமையும், போதிய றோலர் வசதி இன்மையுமே காரணமென சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் யாழ். செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

போதிய தார் எடுத்து வருவதில் நிலவும் போக்குவரத்துப் பிரச்சினையும், பழுதடைந்த றோலர்களைத் திருத்துவதில் நிலவும் வீண் கால தாமதமுமே வீதித் திருத்த வேலைகள் மந்தகதியில் இடம்பெற்று வரக் காரணமெனவும்—

குடா நாட்டின் பல வீதிகளில் திருத்தும் பணிக்கென கல், மண் என்பன பறிக்கப்பட்டும் அப் பணிகள் நடைபெறாமல் இருப்பது குறித்து பொது மக்கள் கவலை தெரிவிப்பதற்கும் தார், றோலர் சம்பந்தமான பிரச்சினைகளே காரணமெனக் கூறப்பட்டது. (இ-7)

## திருத்தப்படாத மயான வீதி

யாழ்ப்பாணம், மே 26

திருநெல்வேலி கலாமன்ற வீதியில் இருந்து கட்டை ஆலடி மயானம் ஊடாக கோண்டாவில் இருபாலை வீதியில் சந்திக்கும் மயான வீதி பல ஆண்டுகளாகத் திருத்தப்படாது குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இராசபாதை வீதியில் கோப்பாய் பொலீஸ் நிலையம் அமைந்துள்ள பகுதி மக்கள் போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டிருப்பதனால் நீர்வேலி, கோப்பாய், அச்செழு, சிறுப்பிட்டி, நவக்கிரி விவசாயிகள் தமது விவசாயப் பொருள்களை திருநெல்வேலிச் சந்திக்கு இம்மயான வீதியூடாகவே எடுத்து வருகின்றனர்.

(இ-7)

# படையினருக்கு வலைவீச குற்றச் செயல்கள் வீழ்ச்சி

கொழும்பு, மே 26

இராணுவத்திலிருந்து தலைமறைவானவர்களைத் தேடும் நடவடிக்கை காரணமாக வடக்கு— கிழக்குக்கு வெளியே குற்றச் செயல்களில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸ் தகவல்கள் கூறுகின்றன.

கொள்ளை, கொலை, கடத்தல்வழிப்பறிபோன்ற குற்றச் செயல்களில் தலைமறைவான இராணுவத்தினர்தான் ஈடுபடுவதாக பரவலான முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டு வந்தன.

தலைமறைவான இராணுவத்தினரைத் தேடும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் குற்றச் செயல்கள் வீழ்ச்சியடைந்துள்ளன என்று பொலிஸ் தகவல்கள் மேலும் தெரிவித்தன.

(இ-2)

# சீரற்ற பஸ் சேவை ராணுவ சோதனை; தாமதமாகி வரும் அலுவலக ஊழியர்

யாழ்ப்பாணம், மே 26

சீரற்ற, ஒழுங்கற்ற போக்குவரத்துச் சேவையாலும், தற்போது திடீரென அதிகரித்துள்ள இராணுவ பரிசோதனை நடவடிக்கைகளாலும், வடமராட்சிப் பிரிவில் இருக்கும் அரச உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் தம்கடமைக்கு நேரத்துடன் சமுகமளிக்க முடியாத நிலைமை இருந்து வருவதாகக் கூறப்படுகின்றது.

தற்போது வடமராட்சி வாழ் அரச பணியாளர்களில் 75 சத வீதமானவர்கள் யாழ்ப்பாணப் பகுதியிலேயே பணியாற்றி வருகின்றார்கள்.

காலை தம் பணிக்கென புறப்படும்இவர்கள் பஸ்ஸுக்காக காத்திருக்கும் நேரம் போ பிரயாணத்தில் சுமார் 2 மணித்தியாலங்களைக் கழிக்க வேண்டி உள்ளது.

வடமராட்சி பருத்தித்துறை பிரதான பஸ் நிலையத்தில் இருந்து காலை புறப்படும் பஸ்கள் குறிக்கப்பட்ட நேரத்துக்கு புறப்படாததும், இராணுவப் பரிசோதனைகளும் பிரயாணம் தாமதம் அடையக் காரணம் ஆகும்.

பஸ் சேவையில் நிலவும் சீர்கேடுகள் குறித்து பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டும் வந்தது.

இம்மாதம் முதலாம் திகதி முதல் பலரின் வேண்டுகோளுக்கிணங்க பருத்தித்துறை பஸ் நிலையத்தில் இருந்து காலை 7 மணிக்கு புறப்பட்டு வல்லை, ஆவரங்கால், நேர் வீதி முத்திரைச் சந்தி, சச்சேரி வீதியூடாக யாழ். பஸ் நிலையத்துக்கு காலை 8.15 மணிக்கு சென்றடைவது என்ற முறையில், கடுகதி பஸ் சேவையொன்று மட்டுப்படுத்தப்பட்ட தரிப்பிடங்களுடன் மட்டும்சேவையிலீடுபடுத்தப்பட்டது.

இச்சேவை ஒரு சில நாட்கள் மட்டுமே ஒழுங்காக இடம்பெற்றது.

பணியாளர்களும் ஒழுங்காகக் கடமைக்குச் சென்று வந்தனர்.

நாளடைவில் இது வழமை போல மட்டுப்படுத்தப்பட்ட தரிப்பிடம் என்ற நிலையில் இருந்து விலகி வல்லை ஆவரங்கால் ஊடாக சென்ற நேர்வீதியையும் மாற்றி அச்சுவேலி ஊடாக வீதியிலுள்ள அனைத்து தரிப்பிடங்களிலும் பயணிகளை ஏற்றியிறக்கிச் செல்லும் சாதாரண சேவைக்கு மாறி விட்டது.

கடுகதி, மட்டுப்படுத்தப்பட்ட தரிப்பிடம் என்ற நிலையில் இடம்பெற்று வந்த சேவை மாறியதால் பஸ் சாதாரணமாக 8.45 மணிக்கு மேலேயே யாழ். பஸ் நிலையத்தைச் சென்றடையும் நிலைக்கு வந்துள்ளது.

மேலும் வடமராட்சிப் பகுதியில் தற்போது 150 மீற்றருக்கு ஒன்று என்ற வகையில் பல இராணுவப்பரிசோதனைகள் திடீர் திடீரென மேற்கொள்ளப்பட ஆரம்பித்துள்ளதால், பஸ்கள் தடுத்து நிறுத்தப்பட்டு பயணிகள் அனைவருமே இறக்கப்பட்டு பரிசோதனைகள் இடம்பெறுவதால் மேலும் பஸ் 45 நிமிடங்களுக்கு மேல் தாமதமடைந்து 9.30 மணிக்கே யாழ். பஸ்நிலையத்தைச் சென்றடைகிறது.

பயணிகள் காலை சுமார் 150 நிமிட நேரத்தை வீணே பிரயாணத்திலேயே கழிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இதனால் யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் வடமராட்சிப் பகுதி அரச பணியாளர்கள் தினமும் கடமைக்குச் செல்ல தாமதமாவதுடன் திணைக்கள உயர் அதிகாரிகளின் சீற்றத்துக்கும் உள்ளாகி வருகின்றனர்.

தினமும் சிவப்புக்கோட்டுக்குக் கீழேயே இவர்கள் கையொப்பமிட வேண்டிய நிலை ஏற்படுகிறது என்று கூறப்படுகிறது. (இ-15)

# செய்திக் கொத்து

## சிறுமி காயம்

யாழ்ப்பாணம், மே 26

மாடி வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமி ஜன்னல் ஊடாக தலைகீழாக வீழ்ந்ததில் காயமுற்ற நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பழைய பூங்கா வீதியைச் சேர்ந்த லோறன்சியா லீனு (வயது 5) என்ற சிறுமியே காயமுற்றவராவார்.

(இ-139-9)

## மதகு திருத்தம்

வலி. வடக்கு, மே 26

அளவெட்டி — மல்லாகம் வீதியில் அமைந்துள்ள அழுக்கைக்குள மதகு திருத்தப்பட்டு வருகின்றது.

கடந்த கால இராணுவ நடவடிக்கையின் போது இம் மதகு குண்டு வைத்து தகர்க்கப்பட்டிருந்தது. இதனால் இப் பாதையால் போக்குவரத்து செய்வதில் வாகனங்கள், பிரயாணிகள் கஷ்டத்தை அனுபவித்ததுடன், மழை காலங்களில் பிரயாணம் செய்ய முடியாத நிலையும் இருந்து வந்தது.

இம்மதகு தற்போது திருத்தப்படுவதினால் குளத்துக்கு வெள்ளம் செல்வதற்குகான வாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. (இ-86-9)

## முதலிடம்

வடமராட்சி, மே 26

யாழ். கல்வி வலயம் இரண்டினால் நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் 19 வயது, 17 வயதுக்கும் உட்பட்ட மாணவர்களுக்கிடையிலான போட்டிகளில் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

(இ-173-9)

## ஆலயத் திருப்பணி

நீர்வேலி, மே 26

மல்லாகம் பெரியதம்பிரான் ஆலய திருப்பணி வேலைகள் நடைபெறுகின்றன. மேற்படி ஆலயத்துக்கு முன்கொட்டகை புதிதாக அமைக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (இ-110)

## வீதி சேதம்

குருநகர், மே 26

குருநகர்மவுன்கார்மல் வீதி போக்குவரத்துச் செய்ய முடியாதளவு குண்டும் குழியுமாக காட்சியளிக்கிறது.

இந்த வீதியைத் திருத்தி அமைப்பதற்காக வீதியின் இரு மருங்கிலும் கொட்டப்பட்ட மண், கல் அண்மையில் பெய்த மழையினால் வீதியின் மத்திய பகுதியில் பரவி போக்குவரத்தை மேலும் கஷ்டமாக்கியுள்ளது.

இம் மண், கல் கொட்டப்பட்டு ஒருமாதத்துக்கு மேலாகியும் வீதியைத் திருத்த எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என இப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (இ-51-9)

## படையினர் அறிவுறுத்து

உரும்பிராய், மே 26

நீர்வேலி வடக்குப் பகுதியில் வதியும் மக்கள், இரவு 9.00 மணிக்குப்பின்பு — ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள வேளையில் — வெளியில் நடமாடக் கூடாது எனவும் —

அவ்வாறு நடமாடுபவர்கள் மீது விசாரணை ஏதுமின்றித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படும் எனவும் —

பாதுகாப்புப் படையினர் அறிவித்துள்ளனர்.

கிராம அலுவலர் மூலம் மக்களுக்கு இவ்வறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

(இ-154-9)

## வெள்ளைப்பூடு பற்றாக்குறை

அரியாலை, மே 26

யாழ்ப்பாணத்தில் வெள்ளைப்பூடுக்கு பெருந் தட்டுப்பாடு நிலவுகின்றது. யாழ். நகரில் உள்ள வர்த்தக நிலையங்களில் ஒரு கிலோ வெள்ளைப்பூடு 160 ருபாவாக விற்பனை செய்யப்படுகின்றது. (இ-17-9)

## மண்எண்ணெய்

அரியாலை, மே 26

யாழ்ப்பாணம் முற்றவெளியில் உள்ள பலநோக்கு கூட்டுறவுசங்கத்தின் எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் மக்கள் கட்டுப்பாடின்றி மண்எண்ணெயைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று சங்கத்தின் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்தார்.

இதனைவிட சங்கத்தின் கிளைகளிலும் மண்எண்ணையை தாராளமாக மக்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார். (இ-17-9)

## இரு குளங்கள் புனரமைப்பு

வலி. தென்மேற்கு மே 26

நவாலி விவசாயிகள் சம்மேளனத்துக்கு உட்பட்ட 'வேடுவன் கண்டி' என்ற குளத்தின் திருத்த வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று சம்மேளனத் தலைவர் மா. செல்வராசா அறிவித்துள்ளார்.

கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக திருத்தப்படாது இருந்த இந்த குளத்தை நவாலியில் உள்ள வேலையற்ற இளைஞர்களைக் கொண்டு திருத்துவதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளைச் செய்து வருவதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை நவாலி 'நங்கன் குளம்' திருத்தப்படுவதற்காக நிதி ஒதுக்கப்படும் பட்சத்தில் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

[இ-185-9]

# புளொட் உறுப்பினரை பதவி ஏற்குமாறு கோரிக்கை

நெல்லியடி, மே 26

''வடமராட்சி தெற்கு மேற்கு (கரவெட்டி) பிரதேச சபைக்கு புளொட் அமைப்பு சார்பாக தெரிவாகிய இரு உறுப்பினர்களும் விரைவாகப் பதவி ஏற்பதற்கு நடவடிக்கை எடுக்கவும்.''

இவ்வாறு கோரும் அவசர செய்தியை, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபைத் தலைவர் செல்லையா சுந்தரமூர்த்தி புளொட் அமைப்பின் உபதலைவரும், இராணுவ பிரிவுத் தலைவருமான மாணிக்கதாசனுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த 20 ஆம் திகதி அனுப்பி வைத்துள்ள அந்தச் செய்தியில் இம்மாதம் 5 ஆம், 8 ஆம் திகதிகளில் இப்பிரதேசசபையின் கூட்டத்தை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும் புளொட் உறுப்பினர்கள் சமுகமளிக்காமையால் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(இ-109)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


## மணமகள் தேவை

இந்து கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த 30 வயது அரசதிணைக்கள உத்தியோகத்தருக்கு ஆசிரியராக அல்லது அரச நிறுவனங்களில் தொழில் புரியும் அழகிய மணமகள் தேவை. இல. 741, C/O உதயன், யாழ்ப்பாணம். (56254)

## ஆங்கிலக் கல்வி

ஆங்கிலம் பேசுவதில் சிறந்த மாணவர்களைப் பெற்றுக் கொடுப்பதே எமது நோக்கம். ஆசிரியர் ந.விக்கினேஸ்வரன் ஆச்சாரி, ஆங்கிலக் கல்வி நிலையம், 426(302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(56217)

## FOR SALE

General stereo Amplifier-A330 GZ (140w, Japan), Technics sterco tuner (FM/MW/$SW_1$ $SW_2$) ST-Z15 S (Japan), Sony Radio Cassette Recorder (Japan) (FS, KW 300 S (New) for sale contact: S. Subananthan, முருகமூர்த்தி வீதி, நெல்லியடி, கரவெட்டி.
(56255)

## உடன் விற்பனைக்கு

Italy Vespa, Rxc 53D (XBS) றேடியோ, Funai டெக் (Onley Play), Box என்பனவிற்பனைக்குண்டு. தொடர்பு: ஜெ. பிரதாபன், வேம்படி முருகமூர்த்தி கோவிலடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (56271)


## திருடர்கள் அட்டகாசம்

வலி தென்மேற்கு, மே 26

மானிப்பாய் – நவாலிப் பகுதிகளில் இரவுவேளைகளில் திருடர்களினால் மக்கள் அச்சம் அடைந்து வருகின்றனர்.

நவாலிப்பகுதியில் இரவு வேளையில் கத்தி, கோடரி சகிதம் வீடுகளுக்குள் புகுந்து இவர்கள் பொருள்களை எடுத்துச் செல்வதாகத் தெரியவருகிறது.

இதேவேளை நவாலி பிரதான வீதியில் விறாந்தையில் படுத்திருந்த இளம்யுவதி ஒருவரின் தாலிக்கொடியும் அண்மையில் பறிபோயுள்ளது. (இ–185–9)

## ஆலய மண்டபம் புனரமைப்பு

நெல்லியடி, மே 26

இராணுவ நடவடிக்கைகளினால் சேதமடைந்த அல்வாய் புதுக்குளங்கரை பிள்ளையார் ஆலயத்தின் மகா மண்டபம் சுமார் இரண்டு லட்சம் ரூபா செலவில் ஆலய அறங்காவலரினால் புனரமைக்கப்பட்டு வருகின்றது. (இ–109–9)

## உலக சூழல் தின ஓவிய போட்டி

யாழ்ப்பாணம், மே 26

கல்வி வலயம் 2 இல் உலக சூழல் தின ஓவியப் போட்டி எதிர்வரும் 30 ஆம் திகதி நான்கு நிலையங்களில் நடைபெறவுள்ளது.

சகல ஆண்டு மாணவர்களுக்கும் நடைபெறும் இந்த ஓவியப்போட்டி சண்டிலிப்பாய் இந்து ம. வி. இராமநாதன் கல்லூரி, நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி, பருத்தித்துறை வேலாயுதம் ம. வி. போன்ற பாடசாலைகளில் நடைபெறும்.

இதேவேளை பாடசாலை மட்டக்கணிப்பீடு தொடர்பான பாடரீதியான செயலமர்வும் மேற்குறிப்பிட்ட திகதியில் கல்வி வலயம் 2 இல் தெரிவு செய்யப்பட்ட நிலையங்களில் நடைபெறும். (இ–5)


## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 23 — 10 — 1926



மறைவு 22 — 05 — 1993

அமரர்

**வல்லிபுரம் சங்கரப்பிள்ளை**

(விவசாய நண்பன்)

திதி: வைகாசி பூர்வபக்க பிரதமை
26 - 05 - 1998

பஞ்சமிலா ஊராக மாற்றிடுவேன் என
நெஞ்சுறுதியுடனே போராடி வெற்றியும் கண்டு
தஞ்சமெனச் சென்றாயோ தலைவன் தாள் தேடி
நெஞ்சுருகி நிற்கின்றோம் நின் வரவு நாடி.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;
மனைவி. பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கைதடி கிழக்கு. (சி–3813)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 01-01-1944

விண்ணில் 06-06-1997



அமரர்

**கந்தப்பு பரிபாலசிங்கம்**

(இளைப்பாறிய விற்பனைத் திணைக்கள முகாமையாளரும் முன்னாள் திக்கம் வடிசாலை களஞ்சியப் பொறுப்பாளரும்)

திதி: 26 - 05 - 1998

ஆண்டொன்று சென்று விட்டால் ஐயா – நின்
அன்புருவம் மறைந்திடுமோ!
பாசமதைப் பொழிந்த நின் பால்முகமும்
எமை விட்டு அகன்றிடுமோ!
வேண்டுகின்றோம் நிமலனை நின் ஆத்ம
சாந்திக்கு வேதனையில் வாடுகின்றோம்!
ஐயா! ஐயா!

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

'வளர்மதி'
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி. (56270)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 09 — 06 — 1934



மறைவு 26 — 05 — 1994

திருமதி

**திருநாவுக்கரசு திரவியம்**

அம்மா!
நான்கு ஆண்டுகள் ஓடினவே ஆனாலும்
உங்கள் நினைவுகள் எம் மனதை விட்டு
அகல வில்லை. பாசமும், பரிவும் காட்டி
எம்மை வளர்த்து வாழவைத்த தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல
முருகப்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரிகள்.

முருகமூர்த்தி வீதி,
சங்கானை. (56200)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 19 — 04 — 1923



உதிர்வு 26 — 04 — 1998

அமரர்

**கந்தையா தம்பையா** (N.K.T)

(முன்னாள் உரிமையாளர், சிவராசா ஸ்ரோர்ஸ்)
அம்பலாந்தோட்டை

எம்மை எல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக் கிருத்திய வைபவத்தில் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அனைவரையும் வேண்டுகின்றோம்.

- குடும்பத்தினர்

பற்பை வளவு,
வதிரி, கரவெட்டி. (56218)

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 17 — 08 — 1947



உதிர்வு 06 — 03 — 1997

அமரர்

**பொன்னர் கந்தையா**

ஆறாது ஆறாது துயரங்கள் உம்நினைவு
ஓராண்டு சென்றாலும் ஓயாதையா
தீராதையா எம்துயரம்
ஏன் சென்றாயோ எம்மைவிட்டு.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், சகோதரர்,
மைத்துனர், உற்றார், உறவினர்கள்.

சங்கக்கடையடி,
நாவற்குளி. (56101)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 06 — 06 — 1943



உதிர்வு 07 — 06 — 1997

திருமதி

**தவமணி கிருஷ்ணசாமி**

திதி: 27 - 05 - 98

பூவுலகில் பரிதவித்து பிள்ளைகள் நிற்க
பாதியிலே தன் கணவன் பதைபதைத்து நிற்க
சாவென்ற துயிலுக்குள் நீ மறைந்து கொள்ள
நீர் நிறைந்த விழி எல்லாம் உன் உருவம் தேடுதம்மா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள், மருமகன்.

வேவில் வளவு,
வல்வெட்டி. (56244)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## காதில் விழுமா?

மனித உரிமைகளைப் பேணுவதற்கான சில ஆக்க பூர்வமான முயற்சிகளில் தற்போதைய இலங்கை அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது என்பது ஏதோ உண்மைதான். ஆனால் அரசபடையினராலும், பொலீஸாரினாலும் கைது செய்யப்படுவோர் சித்திரவதை செய்யப்படும் கொடுமை இன்னும் கணிசமான அளவிலேனும் குறைந்ததாகக் கூறமுடியாது.

ஜெனிவாவில் இம்மாதம் முற்பகுதியில் நடைபெற்ற ஐ. நா. சபையின் சித்திரவதைக்கு எதிரான அமைப்பின் மாநாட்டில் இலங்கையில் நடைபெறும் சித்திரவதைகள் குறித்துக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்படுவோரைச் சித்திரவதை செய்வதை உடன் நிறுத்த வேண்டும். சித்திரவதை செய்வோரை நீதியின்முன் நிறுத்த வேண்டும் — என்று ஐ. நா. அமைப்பு முக்கியமாகவலியுறுத்தி உள்ளது.

இலங்கையில் சித்திரவதைகள் நடைபெறுகின்றன என்பதனை ஐ. நா. மாநாட்டில் கலந்து கொண்ட இலங்கைப் பிரதிநிதி ஒப்புக் கொண்டிருக்கிறார். அது பெரிய காரியம்!

இந்த நாட்டில் அமுலில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசர காலச் சட்டம் ஆகிய இரண்டையும், சித்திரவதைக்கு எதிரான அமைப்பின் பிரகடனத்திற்கு இணங்க, மீளாய்வு செய்ய வேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்ட அம்சங்களில் ஒன்றாகும்.

அவசரகாலச் சட்டமும், பயங்கரவாதத் தடைச் சட்டமும் தமிழர்களுக்கு எதிரான பல கொடுமைகளைச் சட்டரீதியாக்குகின்றன என்பதனை அவ்வப்போது இப்பத்தியில் எடுத்துக் கூறிவருகிறோம்.

அரசாங்கப் படையினர் தமிழர்களைச் சந்தேகப் பிராணிகளாகப் பார்க்கவும், பாதுகாப்பின் நிமித்தம் கண்டபடி கைது செய்யவும், அவர்களின் மனித உரிமைகளை மீறவும், விசாரணை என்ற பெயரிலும், ஒப்புதல் வாக்கு மூலம் பெறும் பொருட்டும் சித்திரவதை செய்யவும் மேற்படி இரண்டு சட்டங்களும் தடித்த போர்வைகளாக விளங்குகின்றன.

மனித உரிமை ஆணைக்குழு மற்றும் தொண்டர் அமைப்புகள் நடுவு நிலையாகவும், திறமையாகவும் இயங்கும் வகையில் பலப்படுத்தப்பட வேண்டும். இலங்கைப் பிரஜை ஒருவர் தனிப்பட்ட முறையில் தமக்கு இழைக்கப்பட்ட சித்திரவதைக்கும், மனித உரிமை மீறலுக்கும் எதிராக சித்திரவதைக்கான ஐ. நா. அமைப்பிடம் அறிவிக்க உரிமை வழங்கப்பட வேண்டும் — என்பன மேற்படி அமைப்பு வலியுறுத்தியுள்ள ஏனைய அம்சங்களாகும்.

எனினும் பயங்கர வாதத் தடைச் சட்டம், அவசர காலச் சட்டம் ஆகியவற்றின் கூரிய பற்களை உடைக்கும் விதத்திலும், சித்திரவதை செய்வோரை நீதிமன்றின் முன் நிறுத்தித் தண்டனை வழங்கும் வகையிலும், அவற்றை மீளாய்வு செய்வதற்கு முன்னுரிமை வழங்கவேண்டும். ஐ. நா. அமைப்பின் குரல் அரசின் காதில் விழுமா?

# சைவ ஆலயங்களில் மிருக பலி; சட்ட ரீதியான தடை அவசியம்

அறிவியல் எத்துணை வளர்ச்சி பெற்ற போதிலும் கிராமங்களில் மக்களின் மரபார்ந்த சிந்தனைகளும் நம்பிக்கைகளும் இன்னும் இருந்து கொண்டேயுள்ளன. அந்த நம்பிக்கைகள் மதஞ் சார்ந்து எழுவதாகவே காணப்படுகின்றன.

இன்றும் கூட தெய்வ ஆசி வேண்டியும், தெய்வ சாபத்திலிருந்து மீளவுமெனக் கருதி நம்பிக்கை கொண்டு யாகங்கள், வேள்விகள் மற்றும் சடங்குகளை மக்கள் நடத்தி வருகின்றனர்.

மழைவேண்டி கொடும்பாவி எரித்துப் பாடுவதும், வேள்விகள் நடத்துவதும் இன்றும் நடக்கும் நிகழ்வுகளாகும். ஆலயங்களில் கும்பாபிஷேகம் மற்றும் கிரியைகளில் நடத்தப்படும் யாகம் சிறப்புற நடந்தால் மழை பெய்யும் என்பது மக்களில் பெருமளவானோரது நம்பிக்கை. அந்த நம்பிக்கை அனேகமாகப் பொய்த்ததில்லை. அல்லாவிடில் அது யாகத்தில் — யாகத்தை நடத்திய முறையில் — ஏற்பட்ட — குறைபாடென்றே அவர்கள் கொள்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் நீண்ட காலமாக வேள்வி நடந்து வந்திருக்கிறது. வேள்வி என்பது இந்து மதத்தில் நீண்ட காலமாகவே இருந்த ஒன்றுதான். சிந்துவெளி நாகரிகத்தில்காளி, நீலி, துர்க்கை போன்ற கடவுளர் வடிவங்களும், அவற்றுக்கு உயிர்ப் பலி நடந்ததற்கான சான்றுகளும் உண்டு. வேதகால வழிபாட்டிலும் உயிர்ப்பலி நடந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இருந்த போதிலும் உயிர்ப் பலியை மறுத்து இந்துமதத்தில் எழுந்த குரல்கள் காரணமாக, வேள்வி என்பது பெருமளவில் வழக்கிழந்து போய்விட்டது. மதங்கள் அன்பைப் போதிக்க எழுந்தவை என்ற கருத்து நிலை நிறுத்தப்பட்டது கடவுள் அன்பே வடிவானவர்; உயிர்களைக் காப்பவர் என்பது இந்து மதத்தில் முதன்மைப் படுத்தப்பட்டது.

எனவே கடவுளின் பெயரால் நிகழ்த்தப்படும் உயிர்ப் பலி நடவடிக்கையான வேள்வி நிறுத்தப்பட வேண்டும் எனப் பல்வேறு கால கட்டத்திலும் பலரும் குரலெழுப்பினர். இலங்கையில் ஆறுமுக நாவலரிலிருந்து இந்து இளைஞர் மன்றங்கள் வரை இந்தக் குரல் ஒலித்து வந்திருக்கிறது.

இந்தக் குரல்களால் சில ஆலயங்களில் உயிர்ப்பலி நிறுத்தப்பட்டமை உண்மை தான். சுன்னாகம் ஐயனார் கோயில் போன்றவற்றில் கண்டனங்களைத் தொடர்ந்து வேள்வி நிறுத்தப்பட்டு விட்டது.

மேலும் சிலவற்றில் சில காலம் வேள்வி நடைபெறவில்லை. இயக்கங்கள் வேள்வியைத் தடை செய்த போது, வேள்வி நடைபெறவில்லை. அதன் பின்னர் அது தொடர்கிறது.

அந்த வகையில் கடந்த 23

**எஸ். ஸ்ரீகுமரன்**

ஆந் திகதி பிரான்பற்று மாரியம்மன் கோயிலில் வேள்வி நடந்தது. அடுத்த மாதம் 13 ஆந்திகதி கவுணாவத்தை வைரவர் கோயிலில் வேள்வி நடக்கவுள்ளது.

பிரான்பற்று மாரியம்மன் கோயில் வயல்களின் இடையே பனங்கூடல் சூழ்ந்த ஒரு சிறு ஆலயம். அதிகாலையிலிருந்தே மக்கள் கூடத் தொடங்கினர். நூற்றுக் கணக்கானோர் இரவே வந்து ஆலயத்தில் தங்கியிருந்தனர்.

லான்ட் மாஸ்ரர், டெண்டில். ட்ராக்ரர் போன்றவற்றில் எடுத்து வரப்பட்ட பல்வேறு அளவான ஆட்டுக் கடாக்கள் ஆங்காங்கே கட்டப்பட்டிருந்தன. ஒலி பெருக்கியில் எம். ஜி. ஆரின் புரட்சிப் பாடல்கள் ஒலித்துக் கொண்டிருந்தன.

ஏழரை மணியளவில் பறை ஒலிக்க தலைக்கடா மாலை சகிதம் ஊர்வலமாகக் கூட்டி வரப்பட்டது. தொடர்ந்து அம்மனுக்குப் பூஜை நடைபெற்றது. தீபம் காட்டும் போதே பூசாரி உடலைக் குலுக்கியவாறிருந்தார்.

பறையொலி உச்சஸ்தாயியில் கேட்கவும், ஒருவர் கலையாடினார். கைகளை நீட்டி மடக்கி, காலெறிந்து உடலை வளைத்து அரை மணி நேரம் அவரது ஆட்டம் நீடித்தது. அதன் பின்னர் ஆலய முன்றலில் வைத்துத் தலைக்கடா வெட்டப்பட்டது. நன்கு தீட்டப்பட்ட மூன்றடி நீளமான கத்தி ஒரு நொடியில் கடாவின் கழுத்தைத் துண்டித்து, இரத்தம் பீறிடச் செய்தது. பக்தர்கள் விசிலடித்து ஆரவாரித்தனர்.

அதனைத் தொடர்ந்து 200 ரூபா செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொண்டவர்களது ஆட்டுக்கடாக்களும், 25 ரூபா செலுத்தியவர்களது சேவல்களும் சற்றுத்தள்ளி பனைமரங்களுக்கிடையில் அமைக்கப்பட்ட களத்தில் பலியிடப்பட்டன.

சுமாராக நூறு ஆடுகளும், ஐம்பது சேவல்களும் இதில் பலியிடப்பட்டன. வேள்வியைப் பார்க்க ஆயிரம் வரையானோர் வந்திருந்தனர். சன நெருக்கடி மிகுந்திருந்தது. பனை மரங்கள் ஒவ்வொன்றிலும் ஏழெட்டுப் பேரளவில் தொங்கியிருந்து பார்த்தனர்.

வெட்டப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டு பனங்கூடலுக்குள் கிடத்தப்பட்டிருந்த கடாக்கள் விலை கூறப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டன. கடாக்களின் எண்ணிக்கை அதிகமாயிருந்ததால் விலையில் சரிவு காணப்பட்டது. 25 ஆயிரம் ரூபாவாக மதிப்பிடப்பட்ட கடா 20 ஆயிரத்துக்கே விலை போனது. சிறிய ஆடுகளை விற்க முடிந்த போதும் பெரிய ஆடுகளைக் கேட்பார் தொகை குறைவாகவே இருந்தது எனலாம். இதனால் சிலர் தமது ஆடுகளை வெட்டாமலே கொண்டு சென்றதையும் காணக் கூடியதாக இருந்தது.

இந்த வேள்வியை மதத்தின் பேரால் நடக்கும் ஒரு வியாபாரமென்றும் கூறலாம் இறைவனுக்கு முன்னால் பணஞ் செலுத்தி ஆட்டை வெட்டி பின்னர் அவற்றை விற்பனை செய்வது என்பது இதைத்தான் புலப்படுத்துகிறது.

எப்படியோ, வேள்வியை எதிர்த்துக் குரல் கொடுக்கும் இந்து மத அமைப்புக்களோ, பிராணிகள் நலன் பேணுபவர்களோ வேள்வியைத் தடுத்து நிறுத்த முன் வரவில்லை என்பதையும் இங்கே குறிப்பிடத்தான் வேண்டும்.

உயிர்ப்பலி என்பது கொடுமையானது. அதைவிடக் கொடுமையானது அந்த உயிர்ப்பலியைச் சிறுவர்கள் பார்ப்பது. உயிர்ப்பலியைப் பார்த்த சிறுவர்கள் ஒரு சிறுவனை ஆடாகப் பாவித்து ஒருவர் தலையைப் பிடிக்க, இருவர் கால்களைப் பிடிக்க, இன்னொருவர் கத்தியால் வெட்டிய சம்பவம் முன்னரொரு தடவை எமது பிரதேசத்தில் நடந்ததாகச் சொல்வார்கள். வேள்வியைச் சிறுவர் பார்த்ததன் பிரதிபலிப்பே இது. இவ்வாறான வன்முறை மனோபாவத்தை சிறுவரில் விதைப்பதாக இந்த வேள்வி அமைகிறபோது அது நிறுத்தப்படவேண்டிய ஒன்றென்பது மறுப்பதற்கில்லை.

அன்பே சிவம் என்பது சைவசமயத்தின் அடிப்படைத் தத்துவம். அவ்வாறிருக்க, அன்பை முற்றிலும் அகற்றி வாய் பேசாச் சீவன்களான பிராணிகளை, ஆலயங்களில் வைத்துக் கொலை செய்யும் நிகழ்வுகள் சட்ட ரீதியாகத் தடைசெய்யப்பட வேண்டும்.

## ஏழைகளுக்குத் தொண்டு புரிந்தபுனிதபிலிப்நேரியார்

(புனித பிலிப்பு நேரியார் உற்சவ தினம் இன்று மே 26 ஆம் திகதியாகும்)

புனித பிலிப்புநேரியார் புளோறென்ஸ் பட்டினத்தை சேர்ந்த செல்வச் சிறப்புமிக்க ஒருகுடும்பத்தை சேர்ந்தவர். தமது 18 ஆவது வயதில் உலக சுகபோகங்களையும், பேரையும், புகழையும், அழிந்து போகும் ஆடம்பர வாழ்வையும் முற்றாக வெறுத்து, தேவதொண்டு புரிவதற்காக, ரோமாபுரிக்குச் சென்றார். இப்புனிதர் புரட்சிகரமான புனித வாழ்வை ஆரம்பித்து பற்பல பரித்தியாகங்களையும், புரிந்து, கடின தபத்திலும், இடைவிடாத செபத்தியானத்திலும், கடும் உபவாசத்திலும் தமது துறவற வாழ்வை நடத்தினார். இவருடைய உணவு கோதுமை, கீரைவகை, பழவகைகளில் மாத்திரம் அடங்கும்.

ஏழைகள், அனாதைகள், நோயாளிகள் மீது அளவு கடந்த அன்புகாட்டி, தன்னால் இயலக் கூடிய எல்லாச் சேவைகளையும் மிகவும் திறம்படப் புரிந்து வந்தார். இத்தகையோரைப் பராமரிப்பதற்கு, பரிசுத்த பரமதிரித்துவத்தின் பெயர் கொண்ட ஒரு வைத்திய சாலையை ஸ்தாபித்தார். பரிசுத்த குருவாக தமது 36 ஆவது வயதில் திருநிலைப் படுத்தப்பட்டார். இவரின் மிகப்பக்தி உள்ள திருப்பலிப் பூசை சொல்லி முடிய இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல்செல்லும்.

கத்தோலிக்கதிருச்சபைக்கு இவர் புரிந்த தொண்டுகளில் மாபெரும் தொண்டு என்னவெனில், வேதம்பரப்புதல் தொண்டுசெய்வதற்கு "தியானப் பிரசங்கியார்" என்னும் மாபெரும் சபையை ஸ்தாபித்ததாகும். இலங்கையில் இற்றைக்கு 250 வருடங்களுக்கு முன்பு, ஒல்லாந்த அரசனின் வேத கலாபனை காலத்தில், இப்புனிதரின் தியானப் பிரசங்கியார்சபையைச் சேர்ந்தகத் தோலிக்க குருமார் இலங்கை முழுவதிலும் கத்தோலிக்க மதத்தைப் பரப்பி 400 தேவாலயங்களைக்கட்டியும், 40-க்கும் மேற்பட்ட கத்தோலிக்க செபப் புத்தகங்களை எழுதியும் உள்ளார்கள். இவர்களில் முத்திப்பேறு பெற்ற பட்டம் பெற்ற அதி. வந். ஆசா. யோசேவாஸ் முனிவரும், செபப் புத்தகங்கள் எழுதிய யாக்கோமே கொன்சால்வெஸ் என்னும் சாங்கோபாங்க சுவாமிகளும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். இவர் எழுதிய புத்தகங்களில் மிகவும் பிரபல்யமானது "வியாகுல பிரசங்கம்" ஆகும். இப்புத்தகத்தை எம்மதத்தவர் வாசித்தாலும்யேசுக்கிறிஸ்து நாதரின் திருப்பாடுகளின் காட்சிகளை நேரில் கண்ட அனுபவத்தை அடைவர். மெய்சிலிர்க்க வைக்கும் இவரது வசனநடையில் பக்திப் பரவசம் வரிக்கு வரி பரிணமிக்கும்.

403 ஆண்டுகளுக்கு முன்பு மரணமடைந்தபுனிதபிலிப்பு நேரியாரின் திருத்தேகம் இற்றைவரை அழியாமல், ரோமாபுரியிலுள்ள "கியேசாநோவா" என்ற பெயர் கொண்ட தேவாலயத்தில் மையப்பகுதியாக வைக்கப் பட்டிருக்கின்றது.

- பிலிப் சேனராயர்

### நாளை

வைகாசி - 13

புதன்கிழமை

திதி: துதியை

முன்னிரவு 10.30 வரை.

நட்சத்திரம்: மிருகசீரிடம்

முன்னிரவு 11.02 வரை

கற்கி ஜெயந்தி

சுபநேரம் 04.22 - 05.52

ராகுகாலம்: 11.52 - 01.22

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

யாரேனும் குறை கூறினால் அது உண்மையாக இருந்தால் உன்னைத் திருத்திக்கொள். பொய்யாக இருந்தால் சிரித்துப் பொருட்படுத்தாமல் விட்டுவிடு.

- எபிக்டெட்டஸ்

## போசாக்கின்மையைதீர்க்க விரைவில் புதியதிட்டம்

கொழும்பு, மே 26

நாட்டில் நிலவும் போசாக்கின்மை பிரச்சினை தொடர்பாக பொதுத் திட்டம் ஒன்றை வகுப்பதற்கு திட்டமிடல் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நாட்டில் சிறுவர் முதல் முதியோர் வரையானோருக்கு போசாக்கின்மை பெரியதொரு பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

அந்தப்பிரச்சினைக்கு எந்த வகையில் தீர்வு காணலாம் என்பது குறித்து திட்டமிடல் அமைச்சு மாவட்ட பிரதி திட்டமிடல் பணிப்பாளர்களுடன் ஆராய்ந்துள்ளது.

இந்தப்பிரச்சினையை பொதுப் பிரச்சினையாக மாவட்டங்கள் தோறும் இனங்கண்டு, திட்டம் ஒன்றின் அடிப்படையில் தீர்வு காண்பதெனக் கொழும்பில் நடந்த கூட்டம் ஒன்றில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

(இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் கண்ணி அகற்றும்பணி
# இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கும்

யாழ்ப்பாணம், மே 26

யாழ்ப்பாண மாவட்டத்தில் கண்ணி வெடிகளை அகற்றும் பணி இரு ஆண்டுகள் நீடிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஐ. நா. திட்டம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இது பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:.

யாழ். மாவட்டத்தில் கண்ணிவெடி அகற்றும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

கண்ணிவெடிகளால் ஏற்படும் இறப்புக்களைக் குறைத்தல், கண்ணிவெடிகளை அகற்றி மக்களுக்கு உதவுதல் ஆகிய இரு இலக்குகளை முன் வைத்து இந்தப் பணி ஆரம்பிக்கப்படுகிறது.

ஐ. நா. அபிவிருத்தித் திட்டம் வழங்கும் நிதியில் இருந்து இந்தத்திட்டம் செயற்படுத்தப்படும். இத்திட்டம் கிட்டத்தட்ட இரு ஆண்டுகள் செயற்படுத்தப்படும் என நம்பப்படுகிறது.

யாழ்ப்பாணச் சமூகத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களைக் கொண்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

சர்வதேச மட்டத்தில் கண்ணிவெடிகளை அகற்றுவதில் நிபுணத்துவம் பெற்ற சிறு குழு ஒன்று விரைவில் இத்திட்ட நடைமுறைக்காக யாழ்ப்பாணத்துக்குவரும். இவர்கள் இங்கு தெரிவு செய்யப்படுவர்களுக்கு பயிற்சிகளை அளிப்பர்.

இந்தப் பணிக்கு ஏராளமானவர்கள் தேவையாக உள்ளதால், இதில் இணைய மக்கள் முன்வரவேண்டும்.

இந்தப் பணியில் ஈடுபட விரும்புபவர்கள் கண்ணிவெடி அகற்றும் பணியகத்துடன் தொடர்பு கொள்ளலாம் —

இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# சட்டவிரோத சாராயம்; அறுவர் கைதாகினர்

யாழ்ப்பாணம், மே 26

மிருசுவில், தவசிக்குளம், வரணி ஆகிய கிராமங்களில் தென்மராட்சி மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி றோகான் ராஜா தலைமையில் கொடிகாமம் தே. ப. பொ. உ. கூட்டுறவுச் சங்க அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையின் போது சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட சாராயமும், உபகரணங்களும் கைப்பற்றப்பட்டதுடன் இது தொடர்பாக ஆறு பேரும்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மீது சாவகச்சேரி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கினை விசாரித்த நீதிபதி குற்றவாளிகளிடமிருந்து தண்டப்பணம் அறவிடுமாறு தீர்ப்பளித்தார். (இ-5)

# புதியகட்டடம்

குருநகர், மே26

பாஷையூர் புனித அந்தோனியர் றோமன் கத்தோலிக்க மகளிர் வித்தியாலயத்துக்கு 90 அடி நீளமான புதிய கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளன.

ஈ. பி. டி. பி அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து இதற்கான நிதி வழங்கப்பட உள்ளது. (51 – 9)

# கள்ளுத் தவறணை

வலி. தென்மேற்கு, மே 26

நவாலி வடக்குப் பகுதியில் கள்ளுத் தவறணை ஒன்றை அமைக்கும் முயற்சியில் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை நவாலி வடக்குப் பகுதியில் கள்ளுத்தவறணை அமைக்கும் முயற்குக்கு கிராம அலுவலர், பாடசாலைகள், அபிவிருத்திச் சங்கங்கள், அனாதை இல்லங்கள், நவாலி இளைஞர் வட்டம் என்பன எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. (இ-185-9)

# அரச ஊழியர்களுக்கு கஷ்ட நிவாரணம்

நவாலி, மே 26

வடக்கு—கிழக்கு மாகாணம் உட்பட பயங்கரவாதம் நிலவும் பிரதேசங்களில் பணிபுரியும் அரச ஊழியர்களுக்கு கஷ்டநிவாரணம் வழங்க அரசு முடிவு செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

இதற்கமைய 1997 ஜனவரி முதல் 97 டிசெம்பர் வரையான காலப்பகுதிக்கு ஊழியரின் சம்பளத்தில் பன்னிரண்டரை சத வீத கொடுப்பனவு செய்வதற்கும் அரசினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதே வேளை கடந்த காலங்களில் இக் கொடுப்பனவு இருபத்தைந்து சத வீதமாக இருந்தது.

தற்போது அரச ஊழியரின் சம்பளம் 60 சத வீதமாக அதிகரிக்கப்பட்டதனால் பன்னிரண்டரை சத வீதமாக கஷ்டநிவாரணக் கொடுப்பனவு குறைக்கப்பட்டுள்ளதாகவும்— இதற்கான சுற்றறிக்கை விரைவில் திறைசேரியினால் அனுப்பிவைக்கப்படுமென்றும் கொழும்பிலிருந்து கிடைத்த தகவலொன்று தெரிவிக்கின்றது. (இ-100)

# ஆசிரியையைத் தாக்கிய ஆசிரியர் கைதானார்!

கொழும்பு, மே 26

பாடசாலை நேரத்தில் ரியூட்டரிக்குச் சென்ற ஆசியரை ஏளனம் செய்த சக ஆசிரியை ஒருவர் அந்த ஆசிரியரால் நையப்புடைக்கப்பட்டார்.

இச் சம்பவம் கண்டி கட்டுகஸ்தோட்டையில் இடம் பெற்றது. சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது—

கட்டுகஸ்தோட்டை ராகுல வித்தியாலயத்தில் பணிபுரியும் ஆசிரியர் ஒருவர் பாடசாலை நேரத்தில் ரியூட்டரிக்கு செல்வாராம்.

அவருடன் பணிபுரியும் சக ஆசிரியை ஒருவர் இந்த ஆசிரியர் ரியூட்டரிக்குச் செல்வது குறித்து ஏளனமாகப் பேசிவந்தார்.

இதனால் கோபமடைந்த அந்த ஆசிரியர் பதுங்கியிருந்து அந்த ஆசிரியை ஏசி, நையப்புடைத்தாராம்.

இது தொடர்பாக அந்த ஆசிரியை கல்லூரி அதிபருக்கும், பொலீஸாருக்கும் முறைப்பாடு செய்தார்.

இதனை அடுத்து பொலீஸார் அந்த ஆசிரியரைக் கைது செய்தனர். (இ-10–3)


தரமான புளொக் தயாரிப்பதற்கு நாடவேண்டிய இடம்



அருண்
புளொக் தயாரிப்பாளர்
அத்துடன்
குறைந்த கட்டணத்தில் தரமான முறையில்
O போட்டோ பிரதிகள்
O அடையாள அட்டை கவரிடுதல் (LAMINATION)
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


# சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, மே 26

இணுவில் அருள்மிகு ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் ஆயலத்தின் வருடாந்தத் தேர்த்திருவிழா எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறும்.

வசந்தமண்டபப் பூசையை அடுத்து சுவாமி தேரில் ஆரோகணித்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார்.

மறுநாள் காலை தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

★ ★ ★

கெருடாவில் அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலய வருடாந்த உற்சவம் நாளை புதன்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தினமும் விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகள் நடைபெறும்.

★ ★ ★

புங்குடுதீவு மேற்கு அருள்மிகு ஸ்ரீ பிள்ளையார் கோயிலின் வருடாந்தத் தேர்த்திருவிழா நாளை புதன்கிழமை நடைபெறும்.

வசந்தமண்டபப் பூசையை அடுத்து பெருமான் தேரில் ஆரோகணித்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார்.

மறுநாள் காலை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

★ ★ ★

இருபாலை — கட்டைப்பிராய் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் நவகுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகம் இன்று செவ்வாய்க் கிழமை காலை 5.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் 28 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.00 மணி முதல் மாலை 2.00 மணிவரையும்—

மகாகும்பாபிஷேகம் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.58 மணி முதல் 8.00 மணி வரையும் நடைபெறும். (இ–30)

★ ★ ★

அளவெட்டி கும்பழாவளைப்பிள்ளையார் ஆலய அந்தரீத பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

தொடர்ந்து விசேட யாக பூசை, ஆராதனை, வழிபாடுகள் இடம்பெறும். (இ-30)


யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின்
நூலக உதவியாளர் (பயிலுநர்) தற்காலிக
வேலை மேற்பார்வையாளர் சுத்திகரிப்பு
பொது /மேசன் /தச்சுந்/ தொழிலாளர்கள்

**பதவிகள்**

மேற்படி பதவிகளுக்கு 14 – 05 - 98 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் கோரப்பட்ட விண்ணப்பங்களின் முடிவு திகதி **29 – 05 – 98** வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்
ஆணையாளர்,
மாநகராட்சிமன்றம்.
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
23-05-98

(சி/3835)



**41 ஆம் நாள் நினைவஞ்சலி**

சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர்
அருள்திரு. A. I. பேர்ணாட்
அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர்
**அன்ரனி அல்போன்ஸ்**
(தாழையடி)

அவர்களை நினைவு கூர்ந்து அவரது ஆத்ம சாந்திக்காகச் செபிப்பதுடன் அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

–பழைய மாணவர் சங்கம்
(சி/3833)



விக்னா
கல்வி நிறுவனம்
வெகுவிரைவில்
O/L DAY CLASS
பிரிவு 2 ஆரம்பம்
(56261)



**ELECTRONIC ENGINEERINC SYSTEMS [PVT.] LTD.**

While information technology has revolutioni zed the work place, many people still prefer to communicate face to face or by Telephone. That make your selection of telephones.

DPABX SYSTEM HIGH LIGHTS ( 8 to 4000 Lines )

- Abbreviated Dialling
- Account Codes
- Callback on Busy
- Data Line Security
- Calling Party indentification

* DID
* DISA
* Conference
* Call forward (internal/external)
* Message Waiting (Lamp or Bell)

A NEW CONCEPT IN COMMUNICATION

More Information:
ELECTRONIC ENGINEEING SYSTEMS (PVT.) LTD.
5 Royal Pearl Gardens, Wattala, 11300
Greater Colombo, Sri-Lanka.

NO: 18, CHIRAMPIYADY LANE,
JAFFNA.
40000

TEL: 01-933811-5
FAX: 01-933816
TELEX: 22466 EESYCE

(C/3831)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆசிரியர்
திரு. கந்தவனச்செல்வன்
அவர்களின் துணைவியார்
திருமதி
**பானு கந்தவனச்செல்வன்**

அவர்கள் அகால மரணமடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்திற்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

97, பிரத்தியேக வகுப்பு மாணவர்கள்

[56295]

## மரண அறிவித்தல்கள்

### சுப்பையா ஆறுமுகராசா

(பிரம்படி ஞானவயிரவர் ஆலய தர்மகர்த்தா)

கொக்குவில் பிரம்படியைச் சேர்ந்த சுப்பையா ஆறுமுகராசா கடந்த ஞாயிறு மாலை 5 மணிக்குக் காலமானார்.

அன்னார் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், கொக்குவில் கிழக்கு சட்டத்தரணி காலஞ்சென்ற ஆறுமுகம் தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற றூபாவின் (லண்டன்) அன்பு அத்தானுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-05-98) செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி சரஸ்வதி ஆறுமுகம்.
(சகோதரி)

பிரம்படி,
கொக்குவில்.

(56300)

திருமதி

### பரமகுருநாதன் பரமேஸ்வரி

கந்தர்மடத்தைச் சேர்ந்த திருமதி பரமகுருநாதன் பரமேஸ்வரி 24-05-98 இல் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று செவ்வாய்க்கிழமை (26-05-1998) நடைபெற்று பூதவுடல் 3.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப. மயூரேசன்
(மகன்)
(17 ஆம் அணி மருத்துவபீடம்)

155(97), அரசடி வீதி,
(ரயில்வே கடவை அருகில்)
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(56301)

### திருமதி நாகராசா தவமணி

திருமதி நாகராசா தவமணி 24-05-98 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா - செல்லமுத்துவின் பாசமிகு மகளும், குமாரசாமி நாகராசாவின் அன்பு மனைவியும், துரைராசா, ஏகாம்பரம், காலஞ்சென்றவர்களாகிய சண்முகலிங்கம், சந்திரவதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மற்றீசியா இந்திராணி, எலிசெபெத் இந்திராணி, ஜெயராணி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், ரகுலகுமார், அசோக்குமார், சூட்டி, மேளின். பாலின், லலிதா, விஜிதா, ஹட்சின்சன், றொலின்சன், நிஜந்தா, காந்தயுபன், கௌசிகா, நிரோஜன் ஆகியோரின் பாசமிகு மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் (25-5-98) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. ஏகாம்பரம்
(UNHCR)

இல. 2, பறூடி லேன்,
அரியாலை.

(56293)

### கு. யோகேந்திரன்

(பபி, இரட்டையர் குழு)

கு. யோகேந்திரன் 25 - 5 - 98 இல் மானிப்பாயில் காலமானார்.

இவர் மனோன்மணியின் அன்புக் கணவரும், கலைச்செல்வன், சிவச்செல்வன், குகச்செல்வன், சாயிநந்தினி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், யோகாவின் அன்பு மாமனாரும், விதுரன், சஞ்ஜீவன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

தகவல்:
மனோன்மணி
(மனைவி)
சிவச்செல்வன்
(மகன் - ஜீவா)

[சி-3837]

செங்கலடி...
(முதலாம் பக்கத் தொடர்)

★ 2 ஆம் லெப். ராம்ரரஜ் (அழகையா நாகேந்திரராசா—மட்டக்களப்பு.)

★ சிவபாலன் (சின்னத்தம்பி சுவேந்திரன்—மட்டக்களப்பு.)

★ சோளவன் (காத்தமுத்து கிரிதரன்—மட்டக்களப்பு.)

★ 2 ஆம் லெப். மேகவண்ணன் (ராஜசுந்தரம் தெய்வேந்திரம் — அம்பாறை.)

★ சசிரேகன் (இன்பராசா சிவரஞ்சன்—மட்டக்களப்பு.)

★ காசிவேலன் (செல்லத்தம்பி சித்திரவேல்—மட்டக்களப்பு.)

★ சிவநாதன் (கமலநாதன் கமலராசா—மட்டக்களப்பு.)

சுமார் இரு மணி நேரம் நீடித்த இத்தாக்குதல் சம்பவத்தில் இரு படையினர் இரு புளொட் உறுப்பினர் உட்பட ஐவர் பலியானதும், 17 பேர் வரை காயமடைந்ததும் தெரிந்ததே.

இராணுவ முகாமையும், 'புளொட்' அமைப்பின் முகாமையும் பலத்த மோதலின் பின் கைப்பற்றிய புலிகள் முகாம் பகுதியை 2 மணி நேரம் தமது பூரண கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்ததாகவும்—

இவ்விரு முகாம் பகுதியில் இருந்தும் பெருந்தொகையான ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியதாகவும் ''புலிகளின் குரல் வானொலி'' நேற்று அறிவித்தது. ஐ-7-9)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரிய மாணவி
செல்வி பே. லதாவின்
அன்புச் சகோதரி
திருமதி
**பானு கந்தவனச்செல்வன்**

அவர்கள் அமரத்துவமடைந்தமையையிட்டு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

விஞ்ஞான நெறி
ஆசிரிய மாணவர்கள்.
பலாலி ஆசிரிய கலாசாலை.

(56291)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிலையத்தின் அங்கத்தவர்
செல்வன் செல்வநாயகம்
அவர்களின் தந்தையார்
**செல்லையா சீவரத்தினம்**

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும், அஞ்சலிகளையும் தெரிவிப்பதோடு அமரரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

இளைஞர் பிரிவு
பகவான் சத்தியசாயி சேவா நிலையம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(56298)

## உபநயன ப்ரம்மோபதேச அழைப்பு

ஸ்வஸ்தி ஸ்ரீ சங்கராச்சாரிய திருமுருக ஆசியுடன் நிகழும் வெகு தான்ய வருஷம் வைகாசி மாதம் 13 ஆம் திகதி (27-05-98) புதன்கிழமை துதியைத்திதியும் மிருகசீரிட நட்சத்திரமும் சித்தயோகமும்கூடிய சுப தினத்தில் காலை 8-00 மணி முதல் 9-34 மணி வரையுள்ள மிதுனலக்ன சுப முகூர்த்த வேளையில்

காரைநகர் மணற்காடு அம்மன் கோயில்
அமரர் பிரம்மஸ்ரீ ச. நாகமுத்தையர் - நாகரத்தினம்மா,
(மலேசியா, கிள்ளான்) அமரர் தி. ஐயாத்துரைக்குருக்கள் ராஜலட்சுமியம்மா
ஆகியோரது பேரன்மார்களும்
சிவஸ்ரீ நா. ஞானசம்பந்தக்குருக்கள் மகேஸ்வரி
தம்பதிகளின் புத்திரர்களுமாகிய சிரஞ்சீவிகளான

**❖ ஞா. கபில்தேவசர்மா ❖ ஜெயதேவசர்மா**

ஆகியோர்களுக்கு

சௌள உபநயனம் (பூணூல் தரித்தல்) நடைபெற திருவருள் கைகூடியுள்ளதால் அத்தருணம் உறவினர்கள், அன்பர்கள் வருகை தந்து ஆசிர் வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்;
சிவஸ்ரீ நா. ஞானசம்பந்தக் குருக்கள்
திருமதி ஞா. மகேஸ்வரி

அம்மன் கோயில், மணற்காடு,
காரைநகர்.

வரவேற்பாளர்:-
பிரம்மஸ்ரீ ஞா. வாசுதேவசர்மா

(சி/383 6)

## நாளை புதுக்கடைத் திறப்பு விழா

வெகுதானிய வருடம் வைகாசி மாதம் 13ஆம் நாள் (27-05-98) நாளை புதன்கிழமை காலை 9-58 முதல் 11-34 வரையுள்ள (பழையநேரம்) சுபவேளையில்

**CITY WINE STORES**

**சிற்றி வைன் ஸ்ரோர்ஸ்**

**மதுபான விற்பனை நிலையம்**

(உத்தரவு பெற்ற வியாபாரம்)
என்னும் நிறுவனத்தை
இல. 178, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
என்ற முகவரியில் ஆரம்பித்து வைக்கவுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.
நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் இச்சுபவேளையில் பங்குகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

மா. அரியரெத்தினம்
(சித்தப்பா)

234, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

விளம்பர அன்பளிப்பு:

**SAN TRADERS**

234, STANLEY ROAD, JAFFNA.

(56284)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கிலம் தெளிவாக எழுத, பேச, கற்க விரும்புகின்றீர்களா?

★ சான்றிதழ்களுடன் கூடிய ஆங்கில பயிற்சி நெறிகள்
★ G. C. E O/L Literature ( ஆண்டு 9-11 )
★ Year – 3 – G. C. E O/L English
★ அடிப்படைச் சிங்களம்

நாடுங்கள்
**THE LYCEUM OF ENGLISH STUDIES**
189, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
(56277)


## ஒரு நாளில்...

(முதலாம் பக்கத் தொடர்)
காசம் வழங்கப்பட்டது.

பௌத்த பிக்குகளும் மதத் தலைவர்களும் விடுத்த வேண்டுகோளின் படியே இந்த இறுதிச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது.

ஏற்கனவே அளிக்கப்பட்ட ஒருவார கால பொது மன்னிப்புக் காலத்திலும், பின்னர் நடத்தப்பட்ட தேடுதல் கைது நடவடிக்கைகளிலுமாக சுமார் 12 ஆயிரம் படையினர் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவிக்கனர். (ஐ-9-21)

## மாங்குளத்தை...

(முதலாம் பக்கத் தொடர்)
ரிக்கும் அதேவேளையில்—

மாங்குளத்தைப் படைத் தரப்பிடம் பறி கொடுக்காமல் பாதுகாக்கும் நடவடிக்கைகள் குறித்து புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் தனது தளபதிகளுடன் விசேட ஆலோசனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக இராணுவப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்தன.

உத்தேச இராணுவ நடவடிக்கை மூலம் பெறும் செல்வாக்கை எதிர்வரும் ஓகஸ்டில் — மாகாணசபைத் தேர்தல் காலத்தில் — பயன்படுத்தி தேர்தல் வெற்றிகளை ஈட்டுவதற்கு அரசு திட்டமிட்டு இருப்பதாக பிரபாகரன் தனது தளபதிகளிடம் தெரிவித்தார் என்றும் கூறப்படுகின்றது.

என்ன விலை கொடுத்தாவது அரசாங்கத்தின் நோக்கத்தை முறியடிக்க வேண்டும் என பிரபாகரன் தனது தளபதிகளுக்கு எடுத்துரைத்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அதிகளவு சுடுபலத்தையும் குறைந்தளவு ஆள்பலத்தையும் பயன்படுத்தி படை நகர்வை தடுத்து நிறுத்துவதற்கு அவர் திட்டமிட்டிருப்பதாகவும் இராணுவப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்தன.

மாங்குளத்தை நோக்கி முன்னேற முயலும் துருப்புக்களை அழிப்பதற்கு வசதியாக அவற்றுக்கு நெருக்கமாக தமது பீரங்கி நிலைகளைப் பிரபாகரன் நிறுத்தியிருப்பதாகவும் கூறப்படுகின்றது. (ஐ-உ-9)


## துரித கதியில் உங்கள் கலர்படச்சுருள்களை கழுவிப் பெற்றிட

யாழ், நகரில்!

**சுப்பஸோ கலர்படச் சேவை**

(KONICA PHOTO EXPRESS
COMPUTER LATEST 1997
மெஷின் மூலம்)

சுப்பஸோ கலர்படச்சேவை
100A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தென்மராட்சி மக்களின் நலன் கருதி 27-05-98 புதன் முதல் கலர்ப்படச்சுருள்களின் ஏக சேகரிப்பு முகவராக சாவகச்சேரியில்

டெல்கா – DELKA

ஸ்தாபனத்தாரை நியமித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

**டெல்கா DELKA**
பஸ் நிலையம், சாவகச்சேரி.
(மீன் சந்தை அருகில்)
(கட்டணங்களில் மாற்றமில்லை)
(சி/3839)


## கருத்தரங்கு


TITANIC கின் சினிமா மொழி
வி. பி. சிவநாதன்
(தலைவர், பொருளியல் துறை)

காலம்: 27-05-98
மாலை 3-30 மணி

இடம்: பொருளியல் மண்டபம்
யா/பல்கலைக்கழகம்.

கலை வட்டம்
நுண்கலைத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
(56292)

## என்றும் ஒளிரும் நினைவில்!



மண்ணுக்காய்: 03 — 11 — 1914
விண்ணுக்காய்: 22 — 04 — 1998

**வேலுப்பிள்ளை காசிப்பிள்ளை**

(ஓய்வுபெற்ற ஆசிரியர்,
நுகேகொட பரி. யோவான் பெண்கள் கல்லூரி,
சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாசாலை)

புன்னகை மறவா நின்முகமும்
புத்தொளி பரப்பும் அறிவுரையும்
எங்கள் நலமே உங்கள் சொர்க்கமாய்
எமக்காய் வாழ்ந்த எம் தந்தாய்!
வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வமானாய்
வழிகாட்டி யார் எமக்கு இனி?
எங்கும் உங்களையே காண்கிறோம்
என்றும் ஒளிருமே உம் நினைவு!

எங்கள் குடும்ப விளக்கின் ஆத்ம சாந்திக் கிரியையும் மதிய போசனமும் இன்று செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர் நண்பர்களை கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உங்களையே நினைந்துருகும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"புவனகம்",
கண்ணகை அம்மன் கோயிலடி,
வட்டுக்கோட்டை மேற்கு.
(சி/3838)

## இணுவில் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம்

உ

எதிர்வரும் 30 - 5 - 98 சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் என்பதை முருகன் அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.


இவ்வண்ணம்
கொடியேற்றத் திருவிழா
உபயகாரர்.
[56279]


## எமது புதிய வெளியீடு!

பிரகாஷ்ராஜ், சிவரஞ்சனி நடித்த
★ அவள் ஒரு சிதை

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(சி/3841)


## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு: 13 — 11 — 1930
இறப்பு: 24 — 05 — 1998

அமரர் **கனகசபை பாலசுப்பிரமணியம்**

24 - 05 - 98 அன்று சிவபதம் அடைந்த எமது அணியைச் சேர்ந்த பா. நாகேஸ்வரனின் தந்தையாகிய கனகசபை பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு, அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

13 ஆம் அணி
மருத்துவபீட மாணவர்கள்
[56281]


## எமது வீடியோ CD வெளியீடுகள்!

★ அவள் வருவாளா
★ இனியவளே
★ துள்ளித் திரிந்த காலம்
★ மணிவண்ணனின் நகைச்சுவை
★ சிவசக்தி
★ மகளிர் மட்டும்
★ உன்னால்முடியும் தம்பி
★ மெல்லத் திறந்த கதவு
★ பில்லா

**சுப்பஸோ வீடியோ சென்ரர்**
யாழ்ப்பாணம்.

குறிப்பு:
வீடியோ CD யில் வெளியான அனைத்துப் படங்களும் CD யில் இருந்து [illegible] தரப்படும்.
(சி/3840)


## 45-ம் நாள் நினைவஞ்சலி

எமது கலாசாலையின்
முதலாம் வருட ஆசிரிய மாணவி
திருமதி அனுஷா கலாதேவன்
அவர்களின் அன்புத் தந்தையார்
அமரர்
**ஆறுமுகம் சின்னத்துரை**
அவர்களுக்கு எமது அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம்.

அதிபர், விரிவுரையாளர்கள்,
ஆசிரிய மாணவர்கள்,
பலாலி ஆசிரிய கலாசாலை.
(56290)

## கண்ணீர் அஞ்சலி

யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவன்
சி. செல்வநாயகம் அவர்களின்
பாசமிகு தந்தையார்
**செல்லையா சீவரத்தினம்**
அவர்கள் 25-5-98 அன்று இயற்கை எய்திவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

97 வர்த்தகப்பிரிவு மாணவர்கள்,
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி.
[56289]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிரைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சுமனையில் 26-05-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org